246

Registered No. M. 1500 "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௫ 1933ஞ ஜூன்மீ பரல் ௮

உள்ளுறை

	பக்கம்
பூகோள விலாசம்	௱௭௪
சமரச சன்மார்க்க போதம்	௱௭௫
நமது சிந்தனை	௱௭௮
ஆற்றலுடை மக்கள்	௱௮௧
வெண்ணிலவு	௱௮௪
கற்றவர் மடமை	௱௮௬
இருவினை	௱௮௭
நமது நாட்டில் வழங்கும் பழக்கதைகள்	௱௮௯
சந்நா சல்லாபம்	௱௯௧
திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்	௱௯௪
இடியேறு	௨௦௩

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

பாம்பன்:

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசீட சம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு.	1	0
வேதவியாசம்	0	10
சிவதத்துவியாச மூலமு முரையும் 2-ஆம் பதிப்பு.	0	11
பத்துப் பிரபந்தம்	0	7
தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும்	2	8
பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும்	2	0
சுத்தாத்வைத நிர்ணயம்	0	8
திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும்	10	0
ஸ்ரீமத் குமாரசுவாமியம்	5	0
செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வேள் இருமாப்பும்	0	6
சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு	0	6
குமரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 8-ஆம் பதிப்பு	0	2
குமரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1 ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல்	3	8
அமைதி வைப்பென்னுஞ் சேந்தன் செந்தமிழ்	0	2
சண்முக சகச்சிரநாமார்ச்சனை	0	4
செவியறிவுறூஉ	0	1½
ஷெடி காலிகோ பைண்டு	0	2½
பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	0	8
ஷெடி சரித்திரம் காலிகோ	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
சர்வ சோதிட சஞ்சீவி ...	1	8
சிற்பநூல் பொக்கிஷம் ...	1	0
சோதிட பாரா சாரியம் ...	0	12
உத்தரப்பிரதீபிகை	0	12
வீமேசர உள்ள முடையான் 2-ம் பாகம்	1	0
வான சேகர சப்தசேன தீபம் ...	2	0
சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும்	0	6
ஜோதிட ஆசிரியன் 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ...	1	0
அங்க பலன் ...	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் கற்பம் 300 ...	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200	0	12
அகஸ்தியர் அமுத கலைக்ஞானம்	1	4
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	12
இராம தேவரென்ற யாகோபு சுன்ன சூஸ்திரம் 155 ...	0	12
,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 ..	0	10
,, லோகச் செந்தூரம் 300 ...	0	12
,, பஞ்ச மித்திரம் 300 ...	0	14
,, வாத வைத்தியம் 300 ...	0	14
,, வாத சூஸ்திரம் 400 ...	1	4
,, தண்டகம் 100 ...	0	12
,, வைத்திய சூஸ்திரம் 150	0	10
,, வைத்தியம் 800 (மருந்து சுத்தியும் நாடி விவரமும்)	0	14
,, சுண்ணம் 600 ...	1	8
,, வைத்திய சிந்தாமணி 700	1	8
,, வைத்திய கல்லாடம் ...	1	4
,, சுண்ணம் 300 ...	0	14
சித்த வைத்திய அகராதி ...	2	8
திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ...	2	0
பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு	1	8
அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம்	0	12
இராம தேவர் சிவயோகம் ...	0	8
அகஸ்திய முனிவர் கற்பமும் பூசைக் குரு நூல் 100-ம் மந்திரமணி தீட்சை 100-ம்	0	12
கருவூரார் வாதகாவியம் 700 ...	1	0
சட்டை முனிவர் ஞானம் ...	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	12
நந்தீஸ்வரர் நிகண்டு	0	12
விஷ வைத்திய [illegible] ஆரூடம்	2	8
அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள்	0	12
அகஸ்தியர் சுபனவிதி 1500 உரோம காசமுனிவர் 200	1	4

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை

Registered No. M. 1500.

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'　　'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு　　ஸ்ரீமுகவருஷ ஆனிமீ　　பரல் ௪

பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

கின்னரர்கள் சித்தர் கெருட ருரகேசர்
பன்னுமலர் தூவிப் பணிந்தேத்த—முன்னதற்கு
முன்னவனும் வெற்பீன்ற மொய்குழலா டன்னோடு
மின்னுமரி யாசனத்து வீற்றிருப்பன்—அன்னநகர்க்

மகாமேருவும் அதைச் சுற்றியிருக்கிற விஸ்தாரங்களும்

கெண்டிசையுஞ் சூழ விருநான்கு பொற்பதியுண்
டண்டருமங் கெய்தாத வப்பதியில்—தொண்டரெனும்
நந்தி கணங்களெந்த நாளுமக லாதிருப்ப
ரிந்தமலைக் கீழ்மே கலையிரண்டிற்—கந்திருவர்
சித்தர் கடவுளர்கள் சேர்ந்திருப்ப ரம்மலைக்கீழ்
உத்தரத்தும் பூருவத்து மொண்குடக்கு—மத்தெற்கும்
வெற்புமொரு நான்குளதாய் மேருகிரிக் கீழ்பாலின்
வெற்பதுதான் மந்தரந்தண் வெண்ணிறமாம்—பொற்பிரவை
யானகந்த மாதனமு மந்தகன்றிக் கிற்குடபால்
மேனிலவு நீலநிற மேவுபுலந்—தானெளிரும்
உத்தரத்தின் மாதளாயி னுள்விரைபோற் பாரிசமா
மத்திகிரி நான்கி னளவுரைக்கிற்—சுத்தமுள்ள
பூமியின்கி ழெண்ணா யிரம்யோ சனைபொருந்து
நேமிமுதல் மேலுயர நீகேளாய்—நாமத்
திலையுரைக்கில் நாற்பத் திரண்டா யிரம்யோ
சனையாகு மூன்றுஞ் சரியாம்—நனிவரைகள்
கீழ்ச்சுற் றளவின் கெணிதமுமெண் ணாயிரமாம்
தாழ்க்குமேற் சுற்றளவு தானயுதம்—வாட்கண்ணாய்
மந்தரத்தின் மேலான மத்தியினிற் பூக்கனியாய்த்
தந்த கடப்பமரந் தானிற்கும்—விந்தையுள்ள
தென்றிசையில் வைகுந் திகிரியினிற் சம்புமர
நின்றிடு மேற்றிசையி னின்றிலங்கும்—குன்றமதி
னுச்சி மிசையரசு முத்தரத்திற் குன்றமிசை
[ஞா]வச்ச பழுமரமும் வைகியிடு—மெச்சும்
மாங்க ளுயரம் வகைக்கா யிரமா
மாங்கடருஞ் சாயையுமோர் பாதி—வரங்கடரும்

பூருவத்தின் மந்தரத்தின் பொற்கடம்பின் பூங்கனிநீர்
வார வருண மடுவினிற்—நாரும்
பொசிக்க வினிதாகிப் போய்ப்பாயுங் கீழ்பால்
வசிக்குஞ் சயித்திரக்கா வாமென்—றிசைக்கு
மொருநந் தனவனமங் கோங்குமதன் மத்தி
தருபுண்ட ரீகந் தழைக்க—மருவுகின்ற
தாதமெனு மோடையொன்று தான்பொலிவு தோன்றுமெழிற்
கோதையே யின்னமுநீ கூறக்கேள்—நீதிதரு
தென்மலை யின்னுவற் றிகழ்குடம்போற் பூமலர்ந்து
வண்மைதரு காயொருகை[ம்] [1]மாவளவாய்ப்—பின்பழமா
யக்கனிய தொன்றுக் களவுபதி னெங்கலச்சா
றிக்கு ரசத்து மினிதாகிப்—பக்குவத்தின்
விண்டொழுகித் தேறல் விழுமா னசசாசிற்
கொண்டெழுந்து மேருக் குலவரையி—னெண்டிசையுஞ்
சூழவந்து சம்பு நதியெனச்சொல் நாமமுற்றுத்
தாழாதந் நாவலத்தூர் தன்னிலுறும்—வீழுமந்த
நீர்பருகு மாந்தர் நிறங்கனக மாகிவய
தோர்பதின்மூ வாயிரம துற்றிருப்பர்—சேரும்
பறவைமுத லாயிப் படியாகு மந்த
நறுநீர்க் கரைச்சேற்றை நாளுங்—குறைவிலா
மாற்றதிகச் செம்பொனென வான்வர்க டாமணிவர்
சாற்றுநதி யிம்மகிமை தங்குதலாற்—போற்றும்
நவகண்டஞ் சேர்தரைக்கு நாவலந்தீ வென்பர்
இவைகண்ட தின்னமுங்கே ளேழாய்ச்—சுவைகொண்ட
காவலுறை தென்மலைக்கீழ் நண்ணும் விசித்ரமெனுங்
காவிலகு மத்திக் கினில்மல்கும்—பூவிற்
சிறந்தகுமு தோற்பலமுஞ் சேர்மா னதநீர்
நிறைந்தமடு வும்முளதாம் நேரே—பறைந்த
குடபா லரசின் கொழுங்கனியின் சாறு
வடிவாகிச் சீதோத வாவி—யிடமாய்ப்
பெருக்கெடுத்துப் பால்பழந்தேன் பெய்தமெனச் சென்று
பரிக்குமேல் பாற்றிசையிற் பாயுங்—கிரிக்கீழின்
வைப்பிரச மென்னும் வனமுளவா மத்தியினின்
மெய்ப்பாம் விமலோத மென்மடுவா—மொப்பிலா
மாமேரு வுத்தரத்தில் வைகும் வடமரத்தி
னுமேற் பணைகளின்பா லானெய்த்தேன்—றமே
வடக்கனியின் சாற்றுடனே மாமடுவிற் புக்குச்
சடக்கெனவே யுத்தரத்திற் சாரும்—படைக்குந்
திருத்தாக் கியவனமுன் சேருமதன் மத்தி
மருத்தேர் மனோரதமாம் வாவி—பொருந்துமினி

நவகண்ட வரலாறு

அட்ட கிரியி னளவுநவ கண்டவைப்பின்
திட்டமுமே சொல்லக்கேள் சேயிழையே—வட்டமதாம்

(பிரதி)—[1]மாவளமாய்.

பொன்மலைக்குத் தெற்காய்ப் பொருந்துமொன்ப தாயிரத்தில்
மின்னிடத மோரிலக்க மேல்கீழாய்—முன்னீ
ரிருகடையும் புக்கி யிருக்குமுய ரந்தான்
மருவுமிரண் டாயிரமா மானே—விரிவு
மிரண்டா யிரம்யோ சனையாகு மென்பாந்
தெருண்டநவ வாயிரத்தின் தெற்குச்—சுருண்டகுழல்
மின்னேபொற் கூடகிரி மேவு மிருகலையுஞ்
சொன்னுரோன் பானயுதத் தூரமெனப்—பின்னேயு
மேலுயர மேலகலம் விண்டநிட தத்தளவாம்
போலுமுன்சொல் யோசனைத்தென் பூமியின்கண்—பாலின்
வடிவா மிமையவரை வைகுமத னீளம்
குடகீழ் கடலளவாய்க் கொண்டு—நெடிதாகு
மெட்டயுத மாமுயர மீரிரண்டா மாயிரமாஞ்
சட்டமுறும் பொன்மலைக்குத் தான்வடக்கு—விட்டொளிரும்
நீலமணி போலுமொரு நீலகிரி நின்றிடுமப்
பாலும் வடக்குப் படிகமெனக்—காலு
மழகார் சுவேதகிரி யப்பால் வடக்குப்
பழகுஞ் சிருங்கமணிப் பண்பாய்—நிழலாகு
மிவ்வரைகள் மூன்று மியமன் றிசையிலுறும்
அவ்வரைகட் குள்ள வளவாகுஞ்—செவ்விதிகழ்
மந்தரத்தின் கீட்டிசையில் மாலியவான் றென்வடக்கும்
அந்தமுறு நீலநிட தத்தைதமுட்டி—யுந்தும்
வரைநீள முப்பானு லாயிரமா மற்றவ்
வரையுயர மாயிரமா மானே—விரிவு
மேலுஞ் சகத்திரமா மேருவுக்கு மிவ்வரைக்குங்
கோலுமொன்ப தாயிரமாய்க் கொண்டிருக்குஞ்—சால்மக
மேருவுக்கு மேல்பால் விளங்குமொன்ப தாயிரத்தின்
வாரருவி மேவுகந்த மாதனமுஞ்—சேரும்
நிடதநீ லத்தளவு நீண்டிருக்கு நீல
வடிவளவு மாலியவான் மானு—மிடமதனில்
மேல்பாற் கடலளவு விள்ளிலெண்ணான் காயிரமாம்
நீலகிரித் தெற்கு நிடதமட்டுஞ்—சேலனைய

கேதுமால கண்டம்

கண்ணாய்கேள் முப்பானு லாயிரமாய்க் காணுமதின்
மண்ணோர் புகழ்கேது மாலகண்டம்—நண்ணுமதி
யாடவருங் கூடு மரிவையரு முற்பலத்தின்
றோடவிழு மென்மலரின் றொண்ணிறமாய்—நீடும்
வருக்கைக் கனிநுகர்ந்து வாழ்வா ரயுத
மிருக்குநடுக் கண்டமதி னெல்லை—முருக்கிதழீர்
செங்கனக மேருத் திசைக்கொன்பா னாயிரமாய்த்
தங்கியநீ லந்நிடதந் தன்னோடும்—பொங்குசந்த

இளாவிருத கண்டம்

மாதனமும் மாலியவான் மன்னுகிரி நான்கினுக்கு
ளேதமிலாக் கண்ட மிளாவிருத—மீதமரும்

மார்தர் வனச மலரி னகவிதழ்போற்
சார்ந்த நிறமுடையார் சம்புபல—மாந்தியும்பன்
மூவா யிரவருட மூப்புநரை நோய்களின்றிச்
சாவாம லவ்வளவுந் தானிருப்பார்—பூவாரும்

பத்திராச்சுவ கண்டம்

மாலியவான் கீழ்பாலின் வாழ்கேது மாலகண்டம்
போலு மளவாய்ப் பொருந்தியது—சீலமுள்ளோர்
கண்டபத்தி ராச்சுவமாங் கண்டமதின் வாழ்மாந்தர்
விண்ட மதிபைநிகர் மெய்யினராய்க்—கொண்ட
கருங்குவளைப் பூநுகர்ந்து காமுகரு நட்ப
மருங்கினரு மோரயுதம் வாழ்வார்—கருங்குழலீர்
நீல கிரியினுக்கு நேர்வடக்கு வெண்மைதருஞ்
சீலச் சுவேதவரைத் தெற்காக—மேல்கீழ்

பிரமிய கண்டம்

கடலளவு நீண்டிருக்குங் கண்ட பிரம்ய
மிடமாயக் கண்டமதி லேவாழ்—மடவாரு
மைந்தர்களும் வெள்ளி வடிவாய் வடமாங்க
டந்த கனிநுகர்ந்தே சந்ததமுஞ்—சிந்தைமகிழ்ந்
தீரா மாயிரத்தி னெல்லைபிவர்க் காயுளித
னோராஞ் சுவேதவரை நேர்வடக்குக்—காரார்

இரண்மய கண்டம்

சிருங்கவரைத் தெற்காய்த் திரைக்கடலி னீண்ட
மருங்கி னிரண்மயமா மானே—நெருங்கிவளர்
மன்பதைகள் யாரு மதியனைய மெய்யினராய்த்
துன்பமுறு மூப்புத் துகடிலா—ரின்பமுடன்
சம்பீர மென்பலங்க டாநுகர்வா ராயுனிலை
கொம்பேகே ளோரயுதக் கூறதன்மே—லம்புவியி
லோரைஞ்ஞா றுண்டா மெனவுரைப்ப ரோண்சிருங்க
நேர்வடக்குச் சிந்து நிலவரையு—மோரொன்ப
தாயிரமாம் யோசனையா மாழிவளைந் தோங்குதலாற்
றாயகடன் முத்திசையாய்த் தோன்றிபிடு—மேய

குரு கண்டம்

குருகண்ட மாமிதனிற் கூர்ந்திருக்கு மாந்தர்
மரகதத்தின் றன்னொளியா மானே—யொருவயிற்றிற்
பெண்ணாணுங் கூடப் பிறந்தே கலந்திருப்பார்
தண்ணார் பலகனிக டாநுகர்வர்—எண்ணாகு
மாயு ளொருபதின்மூ வாயிரமா மாண்டிருப்பார்
சேயிழையே பொன்மலைக்குத் தென்றிசையிற்—சாயாதே
நின்றிலங்கு நீண்ட நிடதகிரி நேர்தெற்குக்
குன்றேம கூடக் குலவரைக்குத்—துன்றும்

அரிகண்டம்

வடக்குக்கீழ் மேல்பாலின் வாருதியின் மட்டுங்
கிடக்குமரி கண்டமதிற் கேள்வர்—மடக்கொடியீர்
வெள்ளிநிற மேனியராய் வெண்கரும்பின் சாறருந்தி
யுள்ளவய தோரயுத முற்றிருப்பர்—தெள்ளியதோர்
பொற்கூடத் தெற்குப் புகழிமைய நேர்வடக்கு
நிற்குங் கடலிரண்டி னீளமதாய்ச்—சொற்கினிய

கிம்புருட கண்டம்

கிம்புருட கண்டமதிற் கீர்த்திபெற வாழ்மாந்தர்
செம்பொ னுருவமைந்து தேசினுட—னும்பா
றிறவிக் கனிநுகர்ந்தே யின்பமுட னுயுள்
குறையாம லோரயுதங் கொள்வர்—முறையாகச்
சொன்னகண்ட மெட்டுஞ் சுகபோக பூமியிதில்
மன்னு முகிலும் வழங்காம—லெங்காரு
மல்லல்வள மோங்கி வருணமொரு நான்குமின்றிச்
சொல்லுபிணி மூப்புந் துயரின்றி—யெல்லவரு
மாதி யுகத்தி லமைதிபோ லென்றென்று
மேதமிலாப் போகநுகர்ந் தேயிருப்பர்—மேதினியிற்

பரத கண்டம்

சொல்லு மிமையந் தொடங்கியே தென்கடல்மட்
டெல்லையொன் பாயிரவி யோசனையி—னல்ல
பரதகண்ட மாகுமிந்தப் பார்வாழு மாந்தர்
உருவமும்வெவ் வேறுகு மூனும்—பொருவரிய
நெல்விறுங்கு சாமை நிறைவரகு கேள்வரகு
நல்லதினை கம்பு நனிவாலி—புல்லரிசி
மாட முதற்பயற்றின் வற்கமுடன் காயிலைக
ளோடுமா னுமை யுடும்புமுதல்—நாடதனிற்
கோதிலாச் சீவசெந்து கோடான கோடியும்பின்
னோது மனேக வுணவாகுந்—தீதிலிவர்க்
காயுணிலை தானிமைத்த லானதுமூ வாறுகொண்டால்
மேயவொரு காட்டை யென்விளம்புந்—தூயவந்தக்
காட்டைமுப்பான் கொண்டாற் கலையாகு மக்கலையின்
கூட்டமுப்ப தோர்முகிர்த்தங் கொள்ளுமே—நீட்டியதோ
ரம்முகிர்த்த முப்பதுகொண் டாலொருநா ளந்நாளுஞ்
செம்மையின்முப் பானுமொரு திங்களென்பர்—இம்மையினிற்
றிங்களோ ராறுகொண்டாற் சேயிழையீ ரோரயன
மங்கயன மும்மிரண்டோ ராண்டாகும்—பங்கமிலா
ஆண்டுமொரு நூறுமென் றூரணங்க டாலுரைக்கும்
நீண்டநா ளுண்டும் நிலையல்ல—ஈண்டவர்முன்
செய்கருமங் கட்கீடாய்ச் சென்மித்துக் காசினியில்
எய்துமற்ப வர்யுளினு மீதன்றி—மெய்தருநற்
றீர்க்கத்து மத்திமத்துந் தேகஞ் சிதைந்திடுவர்
நீர்க்குமிழி போலுமிது நிச்சயமாம்—பார்க்குளிவர்

மரணக்குறி

கால மறிவதற்குக் காலங் குறியிடங்கேள்
சீலமுள்ள பிங்கலையிற் சேர்வாயுச்—சாலவொரு
நாளியங்கில் மூவாண்டி னம்பா துயிரிழப்பர்
மீளா திரண்டுதின மேயோடில்—நீளாதே
யீராண்டிற் சண்ட னெதிரிடுவ னுள்மூன் றுக்
கோராண்டாம் பின்னு முபையத்தில்—நேராக
வையிருநா ளோடி லறுமதியிற் றுனிறப்பர்
வெய்யினேர் வாயில்நன்னீர் விட்டுமிழின்—றுய்யதனுத்
345 தோற்றுதே லோராண்டிற் றேற்பருயிர் தோற்றுதனுத்
தோற்ற மிரண்டுதுண்டாய்த் தோற்றியிடிற்—சாற்றுமதி
யாறளவின் வாணு ளழிவரந்த விற்றுண்டிற்
பேறுடைய காந்திருவப் பெண்ணொருத்தி—யேறி
யிருக்கவே காணி லியமன் பதியில்
இருக்குமதி மூன்றி னிறப்பர்—பெருக்கவரு
மும்மலமுந் தான்குறையில் மூந்நான்கு திங்களினில்
மென்மையுள்ள சண்டனகர் மேவிடுவர்—மை[ம்]மதமா
விண்மீதிற் காணில் விளிவாறு மாமதியிற்
றண்மே லசையாமற் றன்னிழல்தான்—மண்மீ
350 தசையவே காணி லசையா வுயிர்தென்
றிசைசேரு மோர்பகலிற் றிண்ணம்—வசையிலாச்
சந்திரனைப் பூரணையிற் றுனெய்யைச் செப்பகலில்
முந்தவிட்டுப் பார்க்கில் முழுமதியம்—விந்தையுடன்
தென்பாற் குறையிற் சிதைவொரு பட்சத்திற்
பொன்மதியங் கீழ்பாகம் பொன்றிவிடின்—றன்சிவன்
திங்களொன்றி லந்தகனூர் சென்றுவிடு மேல்பாக
மங்கியிடில் நாலுமதி யில்மாணக்—தங்குமதி
யுத்தரத்திற் றுன்குறையி லோங்குமுயிர் மும்மதியிற்
றத்தரமாய்ச் சய்யமினித் தான்சேருஞ்—சுத்தவிதழ்
355 நாக்கு மிடறு நசையறவே தான்புலரிற்
சே[ர்]க்குமறு திங்களினிற் றென்புலத்தில்—நாக்குதடு
பல்லுண்ணாத் தாலு பரிவாய்க் கறுப்பேறிற்
கொல்லுமறு திங்களினிற் கோதையே—நல்ல
புனலாடிற் கைகாலிற் புள்ளியிடை யங்கம்
நனையாதே லோர்மதியி னந்துங்—தனதுருவைத்
தற்பணத்தைப் பார்க்கிற் றலைவயிறு தோன்றாதே
லற்பவுயி ரோர்மதியி லற்றிடுவர்—நற்பகலோன்
முன்னிரண்டாய்த் தோன்றில் முடிந்திடுவ ரோர்மதியிற்
றுன்னுதனு நாற்றிசையுந் தோன்றியிடிற்—பொன்னசலம்
360 போன்றபக ரோர்திபுரம் புக்கிடுவர் பக்கமொன்றி
னேன்றபே யாடல்பக லேகாணிற்—றேன்றாத
காந்திருவ மாநக ரங்கனம திற்றேன்றி
னேந்திதலை மீதில்விழி னெண்டொடியே—மாந்தரவர்
சின்னுளி னந்தகனூர் சேர்ந்திடுவ ராதுலர்கட்
கெந்நாளு மீவோ னிலையெனினும்—பின்னேது

(தொடரும்)

சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

VIII கலம்பகம்

[இப்போதம் நூலாகும்போது கீழ் வருவன ஆங்காங்கே பொருந்திய இடங்களிற் சேர்க்கப்படும்.]

21. உடல், இறைகோயில். அதை நோய்க்குடிலாக்குவது தவறு. அதனால் உயிர் நலனுக்குக் கேடு நேரும்.

22. நல்லுடலுக்கு அறிகுறி மலச்சிக்கலின்மை. மலச்சிக்கலே எல்லா நோய்கட்குந் தாயகம்.

23. தங்கு மலம், பழமை ஆக ஆக, அது நஞ்சாகி, நாடி நரம்புகளில் தேங்கி மூளையையும் பற்றும்.

24. மலநஞ்சேறப் பெற்ற மூளையினர்க்கு அமைதித் தியானங் கூடுதலரிது. அவர்க்குத் தியானங் குலைந்து கொண்டே போகும்.

25. தியானம் உடல் நலனுக்கும் உயிர் நலனுக்கும் வேண்டற்பாலது. இதுபற்றிப் பின்னுங் கூறப்படும்.

26. மலச்சிக்கலால் வெம்மை எழும். அவ்வெம்மை பலவிதத் தீயொழுக்கங்கட்கு வழிகோலும்.

27. மலச்சிக்கல் உறுதவாறு உடலைக் காப்பது அறிவுடைமை. உடற்பயிற்சியும், பொருந்திய உணவும், நல்லெண்ணமும் மலச்சிக்கல் உறுதவாறு காக்கும். உணவில் சிறப்பாகக் குறிக்கத் தக்கன கீரையும் பழமும்.

28. மலச்சிக்கல் உறின், அதை மருந்தால் போக்க முயல்வது, தற்காலச் சாந்தி தேடுவதேயாகும். மருந்தால் பழைய மல நஞ்சு அறவே நீங்காது.

29. அவரவர் உடல் நிலைக்கேற்றவாறு வாரத்துக் கொருமுறையோ மாதத்துக் கொருமுறையோ நோன்பிருப்பது நலம். நோன்பிகட்கு மலஞ்சிக்குதல் இல்லை.

30. மலச்சிக்கல் உறின், அதைப் போக்கும் பேராற்றல் நோன்புக்கு உண்டு.

31. நோன்பு முறைப்படி இருத்தல் வேண்டும். நோன்பிருத்தற்கு முன்னாள், பகல் உணவு கொண்டு, அன்றிரவு எவ்வுணவுங் கொள்ளலாகாது. மறுநாள் காலை எழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொள்ளுதல் வேண்டும். நோன்பு வேளையில் சோர்வு குமட்டல் மயக்கம் நேரும்போதெல்லாம் நீர் அல்லது உப்பு கலந்த நீர் அருந்தல்வேண்டும். நீர் அருந்தாமல் இருப்பது தவறு. அருந்தும் நீர், சோர்வு குமட்டல் மயக்கங்களைப் போக்குவதுடன், உட்கருவிகளை வறள ஒட்டாமல் காத்து, அவைகளில் ஏறித் தேங்கி ஊறியுள்ள மல நஞ்சு கீழிறங்கத்துணைசெய்யும். நோன்பின் போது தீயொழுக்க நினைவுந் தோன்றலாகாது. அந்நினைவு நாடிநரம்புகளை அரித்துப் பாழாக்கும். அச்சமயத்தில் தெய்வத் தியானஞ் செய்துகொண்டும் தெய்வக் கதைகளைக் கேட்டுக்கொண்டும் இருப்பது நலம். காற்றொளிபடாத இடங்களில் இருத்தலாகாது. முறைப்படி சூரிய ஸ்நானம் செய்வது தவறுதலாகாது. மூன்றாம் நாள் வழக்கம்போலக் காலைக் கடன்களை முடித்து நோன்பு கழிக்கப் புகுதல் வேண்டும். நோன்பைப் படிப்படியாகக் கழித்தல்வேண்டும். திடீரென வழக்கமாகக் கொள்ளும் பரு உணவுகளைக் கொள்ளுதல் பெருந்தவறு; கொள்ளின் நோன்பின் பயனுங் கெட்டு, மெலிந்த உட்கருவிகளெல்லாம் இடர்ப்பட்டு, நலத்துக்குப் பதிலாகத் தீமை விளையும். முதலாவது நீர் அருந்திப், பின்னை பழச்சாறு அருந்தி, பின்னை நீர் மோர் கஞ்சி போன்றன அருந்தி, பின்னை வழக்க உணவு கொள்ளலாம். இஃது ஒருநாள் நோன்பு முறையாகும். விரிவு, நோன்பு நூல்களிற் காண்க;

இயற்கை மருத்தவரிடங் கேட்டுத் தெளிக.

32. நோன்பால் பண்பட்ட நல்லுடல் இயற்கை வாழ்வுக்குப் பொருத்தமானது. அந்நல்லுடல் தியானத்துக்குப் பெருந்துணை செய்யும்.

33. நல்லுடலுக்கு மரஞ் செடிகளிடை வாழ்வதுந் தேவை.

34. மரஞ் செடி முதலிய தாவரங்கட்கும் உயிருண்டு.

35. ஒவ்வொரு வீட்டிலும் மரஞ் செடிகள் சூழ்ந்திருத்தல் வேண்டும்.

36. பாதைகளின் இருபக்கமும் மர வரிசைகள் அமைந்திருத்தல் வேண்டும்.

37. ஒவ்வோர் ஊரிலும் பயிர் பச்சைகள் பரவி இருத்தல்வேண்டும்; சோலைகள் அடர்ந்து நிற்றல் வேண்டும்.

38. காடுகள் நன்முறையில் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

39. நாட்டின் உயிர் காடு; நாட்டைக் காப்பது காடு.

40. ஓரூரின் ஜனத் தொகையைப் பார்க்கிலும் மரஞ் செடிகளின் தொகை அதிகமாயிருத்தல் நல்லது.

41. மரஞ்செடி கொடி முதலியன பிராணவாயுவை உமிழ்கின்றன; கீரை, பூ, காய், கனி முதலியவற்றைக் கொடுக்கின்றன; பசுமைக் காட்சியை வழங்குகின்றன; பறவைகளுக்கு இடந் தருகின்றன; வேறு நலன்களையும் அளிக்கின்றன.

42. பசுமைக் காட்சி வழங்காத ஊர் பாழ். அங்கே நோய்கள் மிகும். பசுமை, மூளைக்கும் நாடி நரம்புகட்கும் நலஞ் செய்வது. பசுமை, வெம்மை தணிக்கும் இயற்கை மருந்து.

43. நகரங்களில் பிணிகள் பெருகுதற்குக் காரணங்கள் பல உண்டு. அவைகளுள் ஒன்று மரஞ் செடி பயிர் பச்சை முதலியன பெரிதும் இன்மை.

44. மரத்தடியில் இருந்தோ நின்றோ உலவியோ கதிரொளியில் மூழ்குவது (சூரிய ஸ்நானஞ் செய்வது) சிறப்பு. கதிரொளி, பச்சிலைகள் வாயிலாக உடலில் படர்வது நல்லது.

45. மக்கள், மரஞ் செடி முதலியவற்றை ஓம்புவது தங்களை ஓம்புவதாகும்.

46. வாயில்லா ஏழைப் பிராணிகளை வதைப்பது நியாயமன்று.

47. இளமையிலே கல்வி பயில முயல்வது நலம்.

48. இளமை, பின்னெழும் வாழ்வு நிலையத்திற்கு அடிப்படை.

49. கல்வித் துறைகள் பல. அவைகளில் மக்கள் தத்தம் இயல்புக்கேற்ற ஒன்றைக் குறித்துக்கொண்டு, அதைச் சிறக்கப் பயிலல்வேண்டும். பிறதுறைகளில் ஒல்லும்வகை பொது அறிவு பெற முயல்வது நல்லது.

50. தொழிற் கல்வியும் கல்வியின் பாற்பட்டதே.

51. கல்வி, பெண் ஆண் என்னும் இருபாலார்க்கும் உரியது.

52. ஒத்த கல்வியுடைய ஒருவரை ஒருவர் மணந்து கொள்வது வாழ்வுக் கழகு.

53. அறிவியற் கலையை வாழ்வு நலத்துக்குப் பயன்படுத்துவது ஒழுங்கு. அக்கலையைப் போருக்கும் கொலைக்கும் பயன்படுத்துவது தவறு.

54. அறிவியற் கலை வாழ்விற்குப் பயன்படு முறையில் வளர்ந்துவரின், அதனால் மன்பதைக்குத் தீங்கு விளையாது; அக்கலைபோருக்கும் கொலைக்கும் என்று வளர்ந்துவரின், அதனால் மன்பதைக்குத் தீங்கு நேரும்.

55. அறிவியற்கலை நன் முறையில் வளரவளர, இயற்கையை உடலாக் கொண்ட இறை உண்மையை எளிதில் உணர்ந்து உறுதி பெறுதல்கூடும்.

56. எவ்வெம்மொழியில் எவ்வெக்காவியங்கள் தோன்றுகின்றனவோ, அவ்வம்மொழியில் அவ்வக்காவியங்களைப் பயின்றால் காவிய இன்பத்தை நுகர்தல் கூடும்.

57. ஒரு மொழியில் தோன்றிய காவியத்தை மற்றொரு மொழியில் பெயர்த்துப் பயின்றால் காவிய இன்பத்தை நுகர்தல் இயலாது.

58. மொழி பெயர்ப்பில் காவியக் கதைகள் அடங்கிவரும்; காவிய இன்பம் அடங்கி வாராது.

59. காவிய இன்பத்துக்குத் தாய் மொழிப் பயிற்சி இன்றியமையாதது.

60. அறிவியற் கலைக்கு மொழிக் கட்டுப்பாடு வேண்டுவதில்லை. அதை எம்மொழி வாயிலாகவும் பயிலலாம்.

61. தன்னல அழிவு, படிப்படியாகப் பெண் ஆண் கூட்டுறவால் நிகழ்தல் வெள்ளிடைமலை. அவ்வழிவு தனித்த வாழ்வில் எங்ஙனம் உறும்?

62. தனித்த வாழ்வில் தன்னலம் அழிதல் அரிது. ஒருவேளை அவ்வாழ்வில் தன்னலம் பெருகினும் பெருகும்.

63. தன்னலத்தை நீப்பது துறவு. அது பெண் ஆணின் அன்பு வாழ்க்கையால் நிகழ்கிறது. ஆகவே, பெண் ஆணை நீத்தும், ஆண் பெண்ணை நீத்தும் வாழ்வது மட்டும் துறவாகாது.

64. இயற்கை அறத்தை இல்லறம் என்றால் என்ன? துறவறம் என்றால் என்ன? பெயரைப் பற்றிய போராட்டம் வேண்டுவதில்லை. வேண்டுவது தன்னலத்தை அறுப்பது.

65. சில சமயங்களில் ஆட்சி முறை தவறுதலாலும், வேறு சில காரணங்களாலும் உடல் நலம் வாய்க்கப்பெற்றுத் தொழில் புரிய ஊக்க முடையவரும், தொழில் கிடையாமையால் வருந்தல் நேரும். அந்நிலையில் அவர்க்கு உதவி புரிதல் பாவமாகாது.

66. தொழில் கிடையா நிலைமையை மாற்றி, வறுமையைப் போக்க, அறிஞர்கள் முயலுதல் வேண்டும்.

67. சன்மார்க்கம் நேரிய முறையில் மன்பதையில் பரவினால் தொழில்கிடையாது வருந்தும் நிலை நேராது. இது குறித்துப் பின்னும் விளக்கஞ் செய்யப்படும்.

68. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் இழிவு நாளடைவில் தீண்டாமை முதலிய கொடுமைகளைப் பெருக்குவதாகிறது.

69. மக்களுக்குள் தீண்டாமை கருதுவது மடமை.

70. கடவுள், தீண்டுங் கடவுள் தீண்டாக் கடவுள் என்று இரண்டுபட்டில்லை. ஒரு கடவுளில் தீண்டாமை எங்கிருந்து பிறக்கும்?

71. பிறப்பில் உயர்வு தாழ்வும், தீண்டாமையும் கருதுவோர், அன்புக் கடவுளின் அன்பரா யிருத்தல் முடியாது.

72. கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய சிறப்புக்களில் எல்லாரும் ஒத்திருப்பதில்லை. இவைகளில் மக்கள் வேற்றுமைப் படுதல் கண்கூடு.

73. கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய சிறப்புக்கள் பொது உடைமை. அவை பிறப்பை ஒட்டின அல்ல.

74. தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் கருதுவது சகோதர நேயம்.

75. சகோதர நேயம் பெறுது தெய்வத் தன்மை அடைதல் இயலாது.

76. மலயோக வகைகள் பல. மூச்சைப் பிடிக்கும் மலயோகம், மூச்சைப் பிடியாத மல யோகம், கண் காது முதலியவைகளின் வழிச் செய்யும் மல யோகம் முதலிய பல வகைக ளுண்டு. அவைகளில் சிலவற்றில் சில சமயங்களில் ஒலி கேட்டலும் ஒளி தோன்றலும் நிகழும். இவைகளைக் கொண்டு சில மல யோகிகள் பெருங் கோட்டை கட்டி உலகை வஞ்சிப்பதுண்டு. அவர்களுக்கு உலகம் மிக எச்சரிக்கையாயிருப்பதாக.

77. மூச்சைப் பிடிப்பதில் தவறுதல் நேர்ந்தால் நோயுண்டாகும். அந்நோயாளிகட்கும் சில வேளைகளில் ஒலி கேட்பதுண்டு. இதற்குக் காரணம் நுரை ஈரலின் நலிவும், மண்ணீரலின் சவலையும், பிறவுமாகும்.

78. நோய்வாய்ப்படாத நல்ல மல யோகிகள் சிலருக்கும் ஒலி கேட்பதுண்டு. அவ் வொலி அவர்களது

பயிற்சி மிகுதியால் நாம்புக் குழாய்களி னின்றும் பிறப்பதாகும். அவ்வொலி இயற்கையினூடு பரந்து நிற்கும் அருள் நாதம் அன்று.

79. மல யோகத்தில் தோன்றும் ஒளி, பயிற்சி மிகுதியால் நுண்ணிய நாம்பொலிகளின் உராய்தலால் தோன்றும் பூத ஒளி. அஃது அருள் நாத ஒலிக்கு ஊற்றுயுள்ள ஞான ஒளி அன்று.

80. மலயோக ஒலிக்கும் ஒளிக்கும் அஞ்ஞான வேரைக் கல்லி அறுக்கும் ஆற்றல் கிடையாது.

81. கொலை, களவு, கள், காமம், பொய் முதலிய பாவங்களில் தோய்ந்து கிடக்கும் ஒருவன், மல யோகத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவரிடம் அணுகி, அவ் யோகப் பயிற்சி செய்துவருவானுயின், அவனும் ஒலி கேட்கவும் ஒளி தோன்றவும் பெறுதல் கூடும். அவ்வொலியும் ஒளியும் மேல் நிலை உய்க்கும் எனில் உலகில் ஒழுக்கமே வேண்டுவதில்லை யன்றோ? ஆகவே, மலயோக ஒலி ஒளி அளவில் நின்று, உலகம் ஏமாறுமல் இருப்பதாக.

82. இயற்கைத் தியானத்துடன் உயிர்த்தொண்டுஞ் செய்து வருதல் வேண்டும். இஃது இயற்கை வழிபாட்டின்பாலது.

83. மன உணர்வு மாயும்போது, சில சமயங்களில், போராட்டம் சோதனை முதலியன நிகழும். அவைகளுக்கு எளிமையாகாத உறுதிவேண்டும். அவ் வேளையில் குருநாதன் தோன்றித் துணை செய்வன்.

84. குருநாதன் தோன்றி உண்மை விளக்கியதும் மன உணர்வு முற்றும் மாயும்; அஞ்ஞானவேர் அறுந்துபடும்; "நான்" என்பது சாகும்; உள்ளொளி எழும்.

85. அரும்பு மலரானதும் மணம் எழுவது போல, மனம் மறைந்ததும் உள்ளொளி எழும்.

86. உள்ளொளியும், புறத்தே தோன்றும் இயற்கை அழகொளியும் ஒன்றும் போது தனித்த இறையின் தொடர்பு விளங்கும். அதற்கு மேல் நேர்வது சொல்லுக் கடங்காதது.

87. இயற்கையிலுள்ள சக்திகள் பல. அவைகளுள் ஒன்று அருட் சக்தி. அச் சக்தி நிலவாத இடம் இல்லை. அது, நிஷ்காமிய நெஞ்சில் நுழையத் துடி துடித்துக்கொண்டிருக்கும். இயற்கைத் தியானத்தால் நெஞ்சம் நிஷ்காமியம் பெறுந்தறுவாயில், அச்சக்தி நெஞ்சில் நுழைந்து கொள்ளும்; நுழைந்து கொண்டு குருநாதன் வருகைக்கு வழி கோலும்.

88. மன உணர்வினர்க்கு மிக அரியனவாகத் தோன்றுவன வெல்லாம், உள்ளொளியினர்க்கு மிகஎளியனவாகத் தோன்றும். இவர்கள் நிகழ்த்துஞ் சில செயல்கள் மன உணர்வினர்க்குச் செயற்கருஞ் செயல்களாக அதாவது அற்புதங்களாகத் தோன்றும்.

89. உள்ளொளியும் புற வொளியும் ஒன்றித் தனித்த இறையின் தொடர்பை விளக்கி, அதற்கு மேலும் விளக்கும் அநுபூதி நிலையை மன உணர்வினர் ஆராய்ந்து ஆராய்ந்து, மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டுவதில்லை. அரிய காலத்தை அவர்கள் அவ் வழியில் போக்குவது வீண்; அவ்வநுபூதி நிலையை எளிதில் கூட்டவல்ல இயற்கை வழி நிற்க முயல்வது அறிவுடைமை.

90. இயற்கை நெறியே சாலச் சிறந்தது; எளியது; பொருத்தியது. இயற்கை நெறி நின்று உலகம் இன்புறுவதாக.

91. குருமார்கள் வரலாற்றை ஆராய்ந்துகொண் டிருத்தல் அநாவசியம். அவர்களைக் காண நேரும்போது அவர்கள் வரலாறு விளங்கும்.

92. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் குருமார்கள் இருத்தல் உண்மை.

93. குருமார்கள் நிலை, புலனறிவு ஆராய்ச்சிக்கு எட்டாதது. அவர்கள் நிலை, தியான முதிர்ச்சியில் மலரும் மாசற்ற மெய்யுணர்வில் விளங்குவது.

94. உணர்வு இருவகைத்து. ஒன்று பொய்யுணர்வு; மற்றொன்று மெய்யுணர்வு.

95. பொய்யுணர்வு நிலையுதலில்லாதது; மாறுவது. மெய்யுணர்வு நிலையுதலுடையது; மாறுதலில்லாதது.

96. மக்கள் மெய்யுணர்வு பெறும் வரை, பொய்யுணர்வு கொண்டு ஆராய்ச்சியில் தலைப்படுகிறார்கள். அவ்வாராய்ச்சியால் நிலைத்த முடிவுகள் ஏற்படுவதில்லை. அவரவர் கல்வி அறிவு அநுபவத்துக்கேற்ற அளவில் ஆராய்ச்சி முடிவுகள் தோன்றும். ஒருவனே ஒருபோது கண்ட முடிவை மற்றொருபோது மாறுபட உணர்ந்து, அதை மறுத்து வேறொரு முடிவு பெறுகிறான். ஆகவே, மெய்யுணர்வு பெறும் வரை நிலைத்தமுடிவு புலப்படுதல் அரிது.

97. பொய்யுணர்வு, புலனறிவினின்றும் பிறப்பது. புலனறிவுக்கு எட்டாத நுட்பங்கள் பலவுள்ளன. அவைகள் புலனறிவு ஆராய்ச்சிக்கு எட்டாதன. அவைகளைப் புலனறிவால் ஆராய்ந்து ஏமாறுவது அறிவுடைமை யாகாது.

98. குருமார்களின் அருள் மொழிகளிலும், அவர்களைக் கண்ட ஞானிகளின் உரைகளிலும் உறுதியும்அன்புங் கொண்டு ஒழுகி, உண்மை காண முயல்வது அறிவுடைமை.

99. சன்மார்க்கக் கலப்பில்லாத உலகியற்றுறையோ உயிரியற் றுறையோ இல்லை.

100. சன்மார்க்கம் உலகியலுக்குப் புறம்பான தன்று.

101. சன்மார்க்கத்தை விரித்துக் கூறுவது தெய்வ மறை.

102. தெய்வ மறையின் நிலைமூன்று. அவை மோனம், ஒலி, மொழிஎன்பன.

103. மோனத்தினின்றும் ஒலியும், ஒலியினின்றும் மொழியும் பிறக்கும்.

104. இம்மூன்று நிலையும் குருமார்கட்கு உரியன.

105. குருமார்கள் பருவுடல் தாங்கும் போது, அவர்கள் வாயிலாகத் தெய்வமறை மொழிவடிவில் வெளி வரும்.

106. தெய்வமறை பல விடங்களில் பல மொழியில் பலவாறு இறங்கியிருக்கிறது. அவை யாவும் தெய்வத் திருவருள் மொழிகளே. அவைகள் உலகில் பல பெயர்கள் பெற்றிருக்கின்றன.

107. ஐயந்திரிபு மயக்கங்கள் நீங்கி விளக்கம் பெறுதற்குக் குருமார்கள் வாயிலாகப் பிறந்த தெய்வ அருள் மொழிகளைப் பயில்க; பயின்று அவைகளின் வழி நிற்க.

108. இச் சமரச சன்மார்க்கபோதம் சுருங்கிய முறையில் யாக்கப்பட்டது. பல வேறு காலங்களில் பலவேறு இடங்களில் தோன்றி, அவ்வக் கால தேச வர்த்தமானங்களுக்கேற்ற முறையில் குருமார்கள் வெளியிட்ட கருத்துக்களின் ஒருமைப்பாடு, அடியேன் உணர்வில் விளங்கிய முறைப்படி இந்நூற்கண் தொகுத்துக் காட்டப்பட்டது.

109. அடியேன் பல துறைகளில் நின்று பாத்த நூல் பலவற்றிலும் சமரச சன்மார்க்க உயிர் நாடி ஓடிக் கொண்டிருக்கும். அந்நூல்களின் சாரம் இந்நூல்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

"சமரச சன்மார்க்க போதம்"

நூலாகி விட்டது.

விலை அணா 8. தபாற்செலவு அணா 2.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

V

இன்பம்

“ஈண்டு மகன் இயற்றும் நல்வினைகளின் பயனைச் சுவர்க்கத்தில் இன்பமாக நுகர்கின்றான்; தீவினைகளின் விளைவைத் துன்பமாக நரகத்திற்றுய்க்கின்றான். சுவர்க்கம் என்பது மேலே ஆகாயத்தில் எங்கோ மிளிர்கின்றது. நரகம் பாதாளத்தில் எங்கோ கிடக்கின்றது. மக்கள் இறந்தபின் அவரவர் புரிந்த செயற்குத் தகுந்த இடத்தை எய்துகின்றனர்” என்று பழம் புராணங்கள் கூறுகின்றன.

இப்பழங்கதைகள், மக்களது குழவிப் பருவத்தில் - அவர்களது அறிவு விளக்கமுறாத காலத்து - அவர்களைப் பயமுறுத்தி, நற்றுறைகளில் திருப்பும் பொருட்டு அறிவுடையோர்களால் வகுக்கப்பட்ட கட்டு. இடக்கு மிக்க குழவிகட்குப் பூச்சாண்டிப் பயங்காட்டி அடக்குவது பழக்கமல்லவா? ஆனால் புதுக் கல்வி மலிந்து, நூதனம் பரந்து, பல் துறைகளிலும் அறிவு சிறந்து மிளிரும் இக்காலத்தே இக்கதைகள் மனதைக் கவரா.

நாம் இயற்றும் செயல்களின் கனிவை இங்கேயே இப்போதே நுகர்கின்றோம். இறந்த பின் வரும் மறு பிறப்பிலல்ல. நரகம் அல்லது சுவர்க்கத்திலல்ல. இவை இரண்டும் நமது மனதினது துணை நிலைகள். நரகம் பாதாளத்திலும், சுவர்க்கம் ஆகாயத்திலும் இருக்கின்றன என்பதிலும் ஒரு சிறிது உண்மை காணலாம். விலங்கு மனம் எண்ணுவன அனுபவிப்பன யாவும் மண்ணைப் பற்றியதாகவும், கீழ் நோக்கியதாகவும் நின்று மனிதனைக் கீழே இறக்கித் துன்பம் நல்குவன. அறிவு கூர்ந்த தெய்வ மனம் சிந்திப்பன, நுகர்வன, தெய்வ மணங் கமழ்ந்து, மனிதனை மேனிலைகட்கு உந்தி, உண்மை இன்பு பயப்பன.

இன்ப துன்பம், சுவர்க்க நரகம்; இவ்விரட்டைகள் நமது உள்ளத்தின் இரு நிலைகள். இன்பு நமக்குப் புறத்தே தோன்றும் ஒரு பொருளிலாதல், நிகழ்ச்சியிலாதல் இல்லை. அது நம் மகத்திலரும்பும் ஓர் உணர்ச்சி.

வானம் பொழிகின்றது. ஒருவன் இயற்கை விநோதத்தை உன்னியுன்னி, ஆண்டவனது இன்னருள் மன்பதையோர் நலனெய்த, மழையுருக்கொண்டு விண்ணினின்றிழியும் திறனை நினைந்து நினைந்து, வியப்பெய்தித் திண்ணையிலமர்ந்து இன்னிசை மீட்டத் துவக்குகின்றான். மற்றொருவன் இருட்டறையில், கணப்படியில், கம்பளிக்குள் முடங்கி, “இழவு மழை எப்பொழுது நிற்குமோ” என வருந்துகின்றான். முதலவனுக்கு இச்சந்தர்ப்பம் சுவர்க்க இன்பம் மனதிடைத் தோற்றுவிக்கின்றது; மற்றவனுக்கோ அது நரக வேதனையளிக்கின்றது. இன்ப துன்பம் வானப் பொழிவிலா அல்லது மனதிலா?

பிறிதொருவன் இன்னமுதருந்தி இன்புறுகின்றான். நாழிகை பல கடந்து அருந்தியது உடலிற் சார்ந்து விடுகின்றது. ஆயினும் அதில் ஓர் எலி விழுந்து செத்துக்கிடந்ததாயும் அதையே தான் குடித்ததாயும் கேள்விப்படுவானாகில், அவன் குமட்டி வாந்திசெய்து வேதனையடைகின்றான். இன்பதுன்பம் பாலிலா அல்லது மனதிலா?

இன்பமும் இருதிறத்தன. பொய்யின்பம்; மெய்யின்பம். எது பொய் எது மெய் என்று கண்டறிவது மாந்தர் கடன். பொய் இன்பம் ஆதியில் இன்பமாகத் தோன்றி அழிந்து அந்தத்தில் துன்பமே நல்கும். இது

உண்மையில் இன்பமே யாகாது; துன்பமே யாகும்.

இப் பொய்யின்பம் பல் வேறு. எடுத்த கருமம் நன்கு முடிந்தபோது கிடைத்த இன்பம்-விரும்பிய பொருள்-அண்டிய போது உண்டாகும் உற்சாகம் - சுரும்பு முரலும் கோதையழகிய அரிவை நல்லார் பாயல் வழங்கும் ஆநந்தம் - கல்வித்துறையின் அகன்கரை கண்டோம் எனும் செருக்கிலுற்ற மகிழ்ச்சி இன்னன புலன்வழி தொடக்கு மனத்தால் நுகரப்படுவன - இவை சிறு போழ்தே நிலையுற்று, பின் அவலமாகி, ஏமாற்றத்தையே நல்குவன.

மண், பெண், பொன் இவை மனிதனைத் தலைக்கிளப்ப வொட்டாது உலகத்திற் பிணிக்கின்றன. இவை மாட்டு மையல் கொண்டு மகன் மருண்டு இவைகளை மட்டும் அடைந்து விட்டால் இன்புறலாம் என மனப்பால் குடிக்கின்றான். ஆயினும் எதுவரையில் இவை கிட்டாம லிருக்கின்றனவோ - எதுவரை வருங்காலத்தில் அவசியம் தனது ஆசை பூர்த்தியாகும் என்று எதிர்பார்த்து (in expectation) உழைத்துழைத்து, காத்துக் கிடக்கின்றானோ - அதுவரையிற்றான் அவனுக்கு இன்பம் - இவைகளை அடைந்தபின் துன்பத்தின் தொடக்கத்தையே அவன் காண்கின்றான் - உன்னுங்கால் இவைகளைத் தேடித் திரிவதில் துன்பம்; அடைந்தபோது கட்டிக்காப்பதில் துன்பம்; கெட்ட காலத்துக் கணக்கில் கலக்கம்; ஆக என்று இவைகளால் இன்பம்?

“உண்மை இன்பு இவையல்ல” என உணர்வதே நிலைபெறும் இன்பம் - புலன் வழி நுகரப்படுவன நிலைபெறா என அறிந்து மனந்திரும்புவதே அழியாத இன்பம் - நமக்குப் புறத்தே உள்ள ஒன்றால் ஒரு சிறிதும் நன்மை இல்லை என்று தெளிவதே அந்தமில் இன்பம் - அவாவை அவனியில் தோன்றும் ஒன்றனிடம் விடாது இழுத்துப் பிடிப்பதே கெடாத இன்பம் - ஆசைக் குதிரை நம்மைத் தாறுமாறாக இழுத்துச் செல்லாது மதித்து அதை அடக்குவதே நிற்கும் இன்பம் - நெஞ்சத்தினின்றும் எரிநினைவுகளை அதட்டி, அதில் நல்லெண்ணங்களைப் புகட்டுவதே பெரிய இன்பம் - எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லாப் பொருள்களிலும் நன்மையைப் பதித்து ஆநந்தமடைவதே நீங்காத இன்பம் - என்றும் குறைவுபடா இன்பம் நுகர்வதே உண்மை இன்பம்.

இன்பு நிலையே உண்மை நிலை; இயற்கை நிலை. பிறநிலை செயற்கை நிலை; நமது அறியாமையால் வருவித்துக் கொள்ளும் துன்பு நிலை. மழை பொழியும்போது வருந்துபவன் யானை நீராட்டை நிகர்த்து, தானே துன்பத்தை அச்சந்தர்ப்பத்தில் கற்பனைசெய்து கொண்டு கலுழ்பவனாகின்றான். வானம் வழங்குவது நமது தீங்கிற்கா? நலத்திற்கா? துன்பம் மனதின் கற்பனை; இன்பம் இயற்கை.

பிரிவினையால் விளைவது துன்பம் - இணைவில் உள்ளது இன்பம் - பிரிவினை கற்பனை - ஒருமை உண்மை. உலகியற் சட்டம் இருக்கின்றது. அதனுடன் ஒன்ற வருவது நன்மை. பிரிந்து வேறுபட விளைவது தீமை. இயற்கைச் சட்டங்களும் உள. இயற்கையில் ஓர் ஒழுங்கும் உண்டு. இவைகளோடு மனம் ஒன்றுபட உள்ளது இன்பம்; முரண்பட உண்டாவது துன்பம். இச்சட்டங்களை மாற்ற இயலாது. அவைகளோடு ஒத்து அமைதியாக வாழ்தல் கூடும். நமக்குக் கட்டுப்படாத ஒன்றுடன் முரண்படுவது அறிவுடைமை ஆகாது. இயற்கைச் சட்டங்கள் நமது நன்மைக்காகவே ஏற்பட்டன. அவை தீமை வழங்குபவை அல்ல. உலகியற் சட்டங்களும் நமது நன்மைக்குத்தானே ஏற்பட்டன?

காலம் ஓடுகின்றது. வாழ்வு பறக்கின்றது. இவை நம்மை ஒப்பற்ற ஓர் இடத்திற்கு - நிலைக்கு - இழுத்துச் செல்கின்றன. இவ்விடத்திற்கே நாம் ஒவ்வொருவரும் அறிந்தோ அறியாமலோ சென்றுகொண்டிருக்கின்றோம். பேராற்றில் விழுந்துவிட்டோம்; சமுத்திரம் - எங்கும் பரந்த கடல் - எல்லையில்லா வாரி - இதை அடையவேண்

டும். இதுவே நாம் இங்கு மங்கும் ஓடாது, வேகங் கெட்டு, இளைப்பாறக் கூடிய அமைதி இடம். ஆற்றின் நடுவே அமைதியாக மிதப்போமாயின் நமக்கு இடர் சிறிதும் இல்லை. ஆறு, தானே நம்மைச் செல்லவேண்டிய இடத்திற்கு இட்டுச் செல்லும். வேகங் கெடுத்தாளும் வேந்தனடியை உன்னி, ஆறு பாயும்வழி நீந்திச் சென்றால் நமது குறிப்பை இன்னும் க்டிதில் அடைதல் கூடும். அதை விட்டு, இச் சுலபமான வழியை நீத்து, என் நதிப்பெருக்குடன் முரண்டி, எதிர்த்து, நீந்தித் தத்தளித்து, மேன்மூச்சு கீழ்மூச்சு வாங்க, கரைகளில் உள்ள முட் புதர்களிற் சிக்கி, கழிகளில் நுழைந்து, தடுமாறி, கானல் நீரொத்து எதிரே தோன்றி, நா ம்அண்டியதும் கம்பி நீட்டும் நீர் மேற் குமிழிச் சின்னுட் சிற்றின்பத்திற்கு ஆவலாகி அல்லலுற வேண்டும்? என் ஆற்றங்கரையிற் படர்ந்து படிந்திருக்கும் சேற்றைப் பூசிக்கொண்டு, பிரபுக்கள் என்னும் பல உருமாற்ற முற்று ஏமாற்ற மடைந்து, நாற்ற முறல்வேண்டும்? அந்தமில் இன்பப் பெருவாரியை அடைதற்கு நாமே என் இடரைக் கற்பித்துக்கொண்டு தாமதப் படவேண்டும்? இயற்கைச் சட்டம், ஒழுங்கு, ஆற்றின் பெருக்கை ஒத்து, தடைப்படாது இயங்கிக்கொண்டிருக்க அதற்கு மாறாக நாம் ஒழுகுவது அறிவுடைமை யாகுமா?

நம்மை இயற்கையுடன் ஒன்றுபடுத்துவதும், வேறு படுத்துவதும் நமது எண்ணம். துன்பத்திற்கும் இன்பத்திற்கும் காரணம் நமது மனம். இயற்கைச் சட்டம், ஒழுங்கு இவை எக்காலத்தும் எல்லோருக்கும் இன்பம் பயப்பன. நல்ல எண்ணம் - ஒழுங்கான எண்ணம் - thoughts in hormoney with the law and order of nature - நம்மை இயற்கையுடன் ஒன்றுபடுத்தும் - அப்பொழுது உள்ளது இயற்கை இன்பு. தீ நினைப்பு - இயற்கையினின்றும் வேறுபட்ட எண்ணம் - அதனின்றும் நம்மைப் பிரித்து வேறு படுத்தும்.

துன்பம் என்பது இன்பம் இன்மை. எரி எண்ணங்கள் நம்மை இயற்கையினின்றும் மாறுபடுத்துவதால் அதனூடே விரவிக் கிடக்கும் இன்பு நம்மைத் தாண்டி அறியாது ஓடிவிடுகின்றது. அப்போது நமக்கு இன்பம் இன்மை யாகின்றது. எரி நினைவு எரிச் செயலாக முற்றித் துன்பக் கற்பனையாக முடிகின்றது. எரி எண்ணம் இன்ப மறியும் கண்ணை மறைக்கின்றது.

எண்ணமே யாவற்றிற்கும் முதல். வாழ்வை ஆக்குவதும் எண்ணம்; அழிப்பதும் எண்ணம்; துன்பம் தருவதும் எண்ணம்; இன்பமளிப்பதும் எண்ணம். எரி எண்ணங்களை அறவே நீக்கி, இயற்கையுடன் ஒன்றுபட்ட நல்லெண்ணங்களுக்கே நமது மனதை முழுவதும் ஆக்கி விட்டால் நமக்கு இன்பமே எப்போதும் உண்டாகும்.

சிந்தனை யடக்கம் - Thought control - நாம் தீ எண்ணங்களைத் தூரத்தள்ளி, நல் லெண்ணங்களையே எண்ணுதற்குப் பெரும் உதவி செய்யும், உலகில் பருமையில் தோன்றும் எல்லா நலனும் முதலில் நுண்மையில் உண்டாக வேண்டும். மன உலகில் நுண்மையில் நல்லெண்ணம் இன்பு நல்கும் நிலையை உண்டாக்குகின்றது. இன்னிலை நாளடைவில் முற்றிப் பின் புறத்தில் இன்பு நிலையாகக் கனிகின்றது. இச்சீர்திருத்தம் சிந்தனை அடக்கத்தால் நடைபெறும்.

நெஞ்சடக்கம் நமது சித்தத்தைத் தெளிவிக்கும். பொய், மெய்-துன்பம், இன்பம்-தோல்வி, வெற்றி-நோய், சுகம்-இறப்பு, பிறப்பு-வறுமை, நிறைவு-தண்மை, வெப்பம், இன்ன துவந்துவங்களது கூட்டத்தில் மறுகி, உண்மை யறிய மாட்டாது, திகைப் பூண்டை மிதித்ததுபோல் கலக்கமடைந்திருக்கும் சித்தம் நெஞ்சடக்கத்தால் தெளிவுறலாம்.

நெஞ்சடக்கம் வாழ்வை இனிமையாக்கும்; வேண்டியன பெறும் வகையும் தோற்றுவிக்கும்; இயற்கையுடன், இறையுடன் ஒன்று பட்டவர் நாம் எனும் நல்லுணர்ச்சியும் நல்கும்; நினைவடக்கம்நல்கும் நலத்தைச்சொல்ல மொழி கிடையாது; எழுதவடும் அகப்படாது. உள்ளத்திலூறும் அமுதப் பெருக்கை-வரம்பு கடந்த பெரிய இன்பத்தை-கட்டுடைய மனதால் - மொழியால் எவ்விதம் வருணிப்பது?

இன்பம் நமது மனதில் - எண்ணத்தில் இருக்கின்றதே ஒழிய நமக்குப் புறம்பாகத் தோன்றும் ஒன்றில் இல்லை.

ஆற்றலுடை மக்கள்

[திரு. கி. சுப்பிரமணியனார்]

(பேரறிஞர் வாசுவானி அவர்களது கட்டுரையின் தமிழாக்கம்)

இளமை இந்தியாவின் ஆணை தாங்கித் தொண்டாற்றும் "பாரதயுவ சங்கச் சார்பில் நடைபெறாஉம்" "சக்தி ஆசிரமம்" என்று முழக்கும் ஆக்க வுரையாதெனின், ஆன்றோர் சரித்திரங்களைப் பயிலுதல் வேண்டு மென்பதாகும். அறிவுத் துறையில் தலைசிறந்த பெரியார்களும், அருந்தவம் ஓம்புநரும், கர்ம வீரருமே ஆன்றோர் எனப்படுவர். இத்தகைய வள்ளலார்களின் சரித்திரங்களை ஒவ்வொருவரும் நன்கு ஊன்றிப் படித்துணர்வாராக.

சக்தி—ஆற்றல், என்பதே இளந் தோன்றல்கள் சிந்திக்கும் மந்திரமாகும். எனவே, அவர்கள் கனவு காண்பவர்களாயும், ஊக்கங் குன்றிய, செயலற்ற, போலி வீரர்களாயு மிருக்க வொண்ணாது. அவர்கள் என்றும் ஊக்கஞ் செறிந்த, உரம்படைத்த, தத்துவ முணர்ந்த மக்களாய்த் திகழ்தல் வேண்டும். ஆற்றலுடைய ஆன்றோர் சரித்திரங்களையும், நடைமுறையில்—செயலிற் சிறந்து விளங்கிய வீரர்தம் வரலாறுகளையும் அவர்கள் கருத்தூன்றிக் கற்றல் வேண்டும். இந்நூற்கள் மனோ வலிமையின் மாசற்ற சிறப்பினை நன்கு போதிப்பனவாம்.

தற்போது நம் நாட்டு மக்கள் அறிவுத் துறை பற்றிய வாதமுறைகளிலும், ஆடம்பரக் கிளர்ச்சிகளிலும் தலைசிறந்திருந்தும், இது காலைப் பிளவுபட்டு ஆக்கங் குன்றி அழிவெய்தி வருவது, அவர் மனோவலிமையையும் ஊக்கத்தையும் இழந்ததினாலன்றோ? வெற்றி வீரர்களான இராமர், சிவாஜி, இராணாப் பிரதாபர், குருகோவிந்தசிங், நெப்போலியன், லெனின் போன்ற தலைவர்கள் யாண்டும் சக்தி ஓசையை எழுப்பிச் சென்றனர். அவர்களனைவருந் திண்ணிய மனத்தராய், ஆளுந் திறனுடையவராய்த் திகழ்ந்து, உலகிடைத் தங் கொள்கைகள் என்றும் நிலைபெற நிறுவி மறைந்தனர்.

மகா நாடுகளில், காகித அளவிலேயே நிற்கும் பற்பல தீர்மானங்களை நிறைவேற்றும் நமது செய்கையையும், மனப்பான்மையையுங் குறித்து யான் மிகவும் கவல்கின்றேன். வேண்டுவது யாது? மனவுறுதி—மனோவுறுதியே. மேடை மீது புரியும் சொற்பெருக்கும், வீர முழக்கமும் பயனற்றவைகளே. அவைகளால் விளைவது யாதொன்று மில்லை. போலிச் சிந்தனையும், வெற்றுரையும் 'சக்தி'யின்பாற் படமாட்டா. எண்ணங்கள் யாவும் ஒருங்கே திரண்டொளிர்தல் வேண்டும். வெறும் உள்ளக்கிளர்ச்சியும் சக்தியின்பாற் படமாட்டாது. ஆக்கத் துறைபற்றித் தொண்டாற்றும் உணர்ச்சியே சீரியதாகும். அதனையே

யாவரும் மதிப்பர்; போற்றுவர். ஆதவின் சக்தி எனப்படுவது செயல்முறை பற்றிய மனத்துணிபேயாகும்.

மனோவலிமையே வெற்றி பயக்கும்

வாலிபர் முக்கியமாய்ப் படிக்கத்தகுந்தது இருசக்தி வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளாகும். அவர்கள் முறையே காரிபால்டி, (Garibaldi) சோஸ் ரிசால், (Jose Rizal) எனப்படுவர். தற்போது "டிபீற்" எனும் ஆங்கிலப் புனை பெயரோடு வெளிவந்துலவும் ஒரு நவீனத்தில் காரிபால்டியாரின் வீரஞ்செறிந்த சரித்திரமானது செவ்வனே வரையப் பட்டுள்ளது. அதனை ஆக்கியவர், சரித்திரத் துறைபற்றிய நவீனம் வரைவதில் தலைசிறந்த "கச்" எனும் பெரிய நூலாசிரியராவர். காரிபால்டி தம்முடைய வாழ்க்கையில் பற்பல துன்பங்களை எதிர்த்துப் போராடினர் எனினும் அவர் தமது கொள்கையினின்றும் தவறிலர். இவரே போராற்றல் படைத்த வீரராவர். உரோமாபுரியினை ஒன்னலர் பலர் சூழ்ந்து எதிர்த்த போது, "பகைவருடன் போர்தொடுக்க ஒருவரும் முன்வரவில்லையாயின் உரோமாபுரியினைக் காத்தற்கு யான் நாய்களைப் பயன் படுத்துவேன்" எனச் சொற்றனர்.

மனோவலிமை, தன்னம்பிக்கை, அடக்கியாளுந் திறன் ஆகிய இவற்றினாலேயே, அறிஞர் "கச்" என்பார் சித்தரித்தபடியுள்ள சீரிய அரணில்லா உரோமாபுரியினை, போர்முறை அறியாத் தமது போலிவீரருடன், போர்த்துறையில் கைவந்த ஐரோப்பிய வீரர்களோடு எதிர்த்துப் பொருது வாகைசூடினர். ஆதலின் மனோவுறுதியே யாவற்றையும் ஆக்கும் ஆற்றலுடையதாகும். அதனின்றும் அரும்புவதே எதிர்க்கும் வீரம். உரோமாபுரியில் எழுந்த இச்சக்தி ஐரோப்பாவின் வியப்பினைக் கவர்ந்தது.

நாட்கள் பல கழியத் துன்மார்க்கம் யாண்டும் தாண்டவமாடிற்று. மதுபான வெறி கொண்டலைந்த மாக்களின் இழிகுணத்தால் நாட்டில் சுதந்திர உணர்ச்சியே வேரற்றுப் போயிற்று. ஆஸ்டிரிய வீரர்களால் காரிபால்டியும் ஒதுக்கி வைக்கப்பட்டார். இடுக்கண் பல நேர்ந்தும் அவர் தமது கொள்கையினின்றும் சற்றும் விலகிலர். வீரர் பலர் அவரைப் பின்தொடர்ந்தனர். தம்மைச் சுற்றித் துன்பச்சூழல் வளர, வளர அவர் பலத்தில் சிறந்தோங்கினார். இத்தாலியின் ஆக்கத்திலே உறைந்து நின்ற காரிபால்டி தங்கொள்கைகளை என்றும் மாற்றிலர். அழிவெய்தியுள்ள உரோமாபுரியின் கோட்டைகளைக் கண்ணுற்று அவர் ஊக்கத்தை இழந்தாரல்லர். ஒரு தெய்வீக உணர்ச்சியானது, பண்டைப் பெருமையை எய்துவான் சதா அவரைத் தூண்டிற்று. "அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை" என்னும் மனவுறுதியுடைய வீரர்கள் எதற்கும் அஞ்சாரல்லரோ? அவர்களது உளத்தில் சதா அமைதியும் இன்பமுமே குடிகொண்டிருக்கும். அதனாற்றான் காரிபால்டி எதிலும் வெற்றி பெற்றார். அவர் தோல்வியைக் கனவிலும் அறியார். தமது பூதவுடல் நீங்கு முன்னர் இத்தாலியாவின் ஒற்றுமையை நிலைநாட்டினவர் அவரே.

மனோ வுறுதிகளே சரித்திர ஆக்கம்

இளமை இந்தியாவிற்கு ஜோஸ்ரிஸால் என்பாரின் பெயர் நன்கு தெரியவராது. அவரே பிலிப்பைன் தீவிடைத்தம்புகழ் பொறித்த தேசிய வீரராவார். "பிலிப்பைன்வீரர்" என்னும் பெயரிய நூலில் அவரது சரித்திரத்தைப் பரக்கக் காணலாம். ரிஸால் அருந்திறன் படைத்தவர்; சிறந்த அறிவாளி; நவீன நூலாசிரியர்; அரும்பெரும் புலவர்; தம் தாய் நாட்டு மக்கள் யாவரும் கல்வி அறிவிற் சிறந்து, அன்னிய ஆட்சியைத் தவிர்க்க அவர் அரும்பாடு பட்டார். இதுவே அவர் நாட்டிற்குச் செய்த நற்பணியாகும். ரிஸால், 1861ல் பிறந்தார். தமது இளமைப் பருவத்திலேயே கல்வி கற்பதில் அதிக ஆர்வமுடையவராய்த் திகழ்ந்தார்; ஸ்பெயின் தேசத்துக் கல்லூரியில் கல்வி பயின்

றார். கண்டவர் வியக்கும் பேராற்றலுடன் கூர்த்த மதிநலன் படைத்தவராயிருந்தும் காலாசாலை அதிகாரிகள் அவரை ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தினராகவே நடத்தினர். பிலிப்பையினில் இவ்வுணர்ச்சி நாளடைவில் அதிகரிப்பதை அவர் கண்ணுற்றார். அதனால் அவர் தம் வாழ் நாட்களை நாட்டு மக்களின் நலங்கருதித் தொண்டாற்றுவதற்குப் பயன் படுத்துவதெனத் தன் மனதில் உறுதி கொண்டார். தங்கள் இழிநிலை யுணர்ந்து மக்களனைவரும் அன்னிய ஆட்சியாகிய அடிமைத் தளையை நீக்கி, ஆற்றலுடன் உய்யும் வழிதேட அவர்க்குச் சீரிய கல்வி அளித்தல் வேண்டுமென்பதை உணர்ந்து, அப்பணியாற்றப் போதிய பயிற்சி பெறுவான் ஐரோப்பா சென்றனர்; ஆண்டு, மேட்ரிட், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களில் திகழும் கல்லூரிகளில் கல்வி பயின்றார்; பல மொழிகளைக் கற்றார்; அருந்திறன் படைத்த அறிஞர் பலரோடு கேண்மை பூண்டார். இப்பெரியார், பொன்னும் மணியும் கோடி கோடியாகத் தேடிச் செல்வக் களியாட்டில் திளைத்து இன்புற்று வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் மனம் அவ்விதஞ் செய்யத் தூண்டவில்லை. அவர் எளிய வாழ்வையே மேற்கொண்டார். ஸ்பெயின் அரசாங்கத்தின் ஆட்சி முறையைக் குறித்தும், அதிகாரிகளும் மதக்குருக்களும் இழைத்த அட்டூழியங்களைக் குறித்தும் தக்கமேற்கோளுடன் ஒரு நவீனம் வரைந்து வெளியிட்டார். ஸ்பெயின் அரசாங்கத்தார் அவரை ஒரு பெருங் கிளர்ச்சியாளரெனக் கருதினர். உண்மையில் அவர் கிளர்ச்சியாளரல்ல; அவர் விழைந்தது கிளர்ச்சியன்று; சீர் திருத்தமேயாகும். அதனால், அவர் குடும்பத்தினர் யாவரும் துன்புறுத்தப் பட்டனர். அவர்க்குப் பிலிப்பைன் தீவினைப் பிரிய நேர்ந்தது. ஸ்பெயின் அரசாங்கமும் அவரை விடாது பின் தொடர்ந்து இழைத்த இடுக்கண் பல. இறுதியில் அவரைப் பிடித்தனர்; விசாரணை செய்தனர். அதில் அவர் பெருங்கிளர்ச்சி யாளரெனக் குற்றஞ் சாட்டப்பெற்று 1896ல் சுட்டுக்கொல்லப் பட்டார்.

அதுபோது அவர்க்கு வயது 35. எனினும், அவரது மனவுறுதி பிலிப்பைனாஸ் மக்களின் வாழ்வில் ஒருபெரும் மாற்றத்தைத் தந்தது. அவர் மரணம் ஸ்பெயின் அரசாங்கக் கொடுங்கோலாட்சியின் முடிவு கண்டது. இப்பெரியார் உலகினை நீத்த நன்னாளை மக்கள் தேசீய ஆண்டு விழாவாய்க் கொண்டாடினர். நாட்டின் நலங்கருதித் தமது ஆருயிரைப் பலிகொடுத்த தேசாபிமானச் செல்வராம் இவர் மக்களின் ஞாபகார்த்தமாய் விளங்குகின்றார். சோஸ்ரிஸால் எனப் பெயர் வாய்ந்த இப்பெரியாரின் மனவுறுதியே அவர் நாட்டு மக்களுக்குப் புத்துயிரை அளித்தது. மனோவுறுதியே சரித்திரத்திற்கு ஆக்கந் தருவதாகும். ஏனென்னின், மனிதன் அடிக்கடித் தன்னைப் பலவீனமுடையவனாய் நினைப்பதைப் போன்று அவன் சக்தியற்ற ஜீவனன்று. மனிதன் உண்மையில் எதையும் ஆக்கும் பேராற்றல் படைத்தவனாவான்.

பதினொராந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்விய பிரபந்தங்கள் அடங்கியது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது; பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்க விலைச் சுத்தப் பதிப்பு.

தனிப் பிரதி விலை அணா பதினொன்று; ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஆறு.

எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஐந்து; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று அணா பத்து.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை,

வெண்ணிலவு

[திரு. இ. சிவகுருநாதன்]

வெண்ணிலவை விண்ணிற் காண்மின்:- வெண்ணிலவு தண்ணொளி வீசுகிறது; விண்மீன் நடுவண் தவழ்கிறது. அக் காட்சி கண்ணைக் கவர்கிறது; உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. அவ்வொளியுற்ற உடல் குளிர்ச்சியுறுகிறது; உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளி விளையாடுகிறது.

வெண்ணிலவைக் கண்ட மன்பதை மகிழ்ச்சியில் ஆழ்கிறது; மாண் செயல் இயற்றுகிறது. மன்பதை மகிழ்ச்சியுறும் வகையை நோக்குங்கள். வெண்ணிலவின் மாண்பு விளங்கும்.

பச்சிளங்குழவிகட்குப் பால்நிலவு காட்டி பால் சோறு ஊட்டுகிறார்கள்.

"பால்போலும் வெண்ணிலாவே
பகலெல்லாம் எங்கு சென்றாய்..."

"நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா
மலைமேலேறிவா மல்லிகைப் பூகொண்டுவா
......................................"

எனப் பாட்டிசைத்துத் தாலாட்டுகிறார்கள். இளங் குழந்தைகள் உள மகிழ்ந்து விளையாடுகின்றன; குழலினும் இனிய மழலை மொழிந்து மகிழ்ச்சி யளிக்கின்றன; "அம்புலி! அம்புலி!! வா! வா!!" என அன்பொடு அம்புலியை அழைக்கின்றன.

சிறுமியர்கள் சிற்றில் புனைந்து சிறு சோறு அடுகிறார்கள். ஒண்டொடி மடந்தையர் கொண்டான் கொட்டுகிறார்கள். பெதும்பைப் பெண்கள் தும்பி சூழ்கிறார்கள்.

முரண் மிக்க காளையர் அரண் கட்டுதல் முதலிய விளையாட்டு விளையாடுகின்றனர்.

அன்பொத்த காதலர் இன்பொடு கூடி, கொஞ்சிக் குலவுகிறார்கள். பாட்டிமார்கள் பழங்கதைகளைப் பரிவுடன் சொல்லுகிறார்கள்.

ஆராய்ச்சி வல்லோர் புதுமைப் பொருளை ஆராய்கின்றனர். இயற்கை அறிஞர்கள் நிலவைக்கண்டு "என்னே! என்னே!! நிலவின் பரிசு மன்னுக நிலவு; துன்னுக இன்பம். இயற்கை நிலவில் இறையைக் காண்மின்; வணங்குமின்" என்கிறார்கள்.

பகலெல்லாம் உழைத்த தொழிலாளி இரவில் நிலவைக் காண்கிறான்; உடலசைவைப் போக்கிக் கொள்கிறான்.

வெண்ணிலவில் திருவிழவு செய்கிறார்கள்; மகிழ்ச்சிக் கூட்டம் கூடுகிறார்கள்; மகிழ்ச்சி யுணவு உண்கிறார்கள்; இசைக்குழுவும் கூத்துக் குழாமும் கூடுகின்றன.

இத்தகைய வெண்ணிலவைப் பற்றிய பண்டைப் பாவலர் மொழிகள் பலப் பல. அவற்றை விரிப்பிற் பெருகும். புராண முடையார் கூறுவன பெரும் புராணமாக விரியும்.

இக்காலத்து விஞ்ஞானிகள் கூற்றையே எவரும் விரும்புவர். அவர் கூற்றிற் சில கூறுவாம். "சந்திர மண்டலம் சூரியமண்டலத்திற்குத் தாழ்ந்தது. சந்திரன் சூரியனுக்குக்கண்ணாடி போலிருந்து, அவ்வொளியை உலகுக்கு அளிக்கிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியை ஒரு சுற்று சுற்றி வரின் ஒரு திங்கள் ஆகும். சந்திரனில் காணப்படுங் கருமை பூமியின் சாயலாகும்"

வெண்மணல் வெளியில், தண்ணிலவினொளியில், தமிழ்த்தென்றல் தவழ்ந்து வர உட்காருங்கள். உள்ளத்தை உற்று நோக்குங்கள். இனிய எண்ணங்கள் தோன்றி இன்பத்தை ஈனக் காணலாம். இனிய எண்ணங்கள் உடல் நலத்திற்கு உறுதுணை யாகும். ஆதலின் அன்பரீர்! வெண்ணிலவைக் காண்மின்; வெண்ணில வொளியில் மூழ்குமின்; வெண்ணிலவை வாழ்த்துமின்! வணங்குமின்!

கற்றவர் மடமை

(வில்லியம் ஹாஸ்லிட் என்னும் ஆங்கிலப் புலவரின் கட்டுரையைத் தழுவியது)

[திரு. தி. ர. சாரங்கபாணி]

(தொடர்ச்சி)

உடல் வலிமையற்றவனும், நுண்ணிய மனப்பான்மையில்லாதவனும், ஒருவர் கூறியதை மறவாத இயல்பினனும், இயற்கையாகவே மற்ற விஷயங்களை அறிய முடியாதவனுமே வகுப்பில் முதல்வனாக நிற்பான். ஆனால், பள்ளியில் சோம்பித்திரிபவனே, வெறுப்பு மிகுந்தவார்த்தைகளைக்கூட்டும் புத்தகத்தைப் படித்துக் கிளிப்போலும், ஆசிரியர் கூறியதை யோதி மரம்போலும், அநேக மணிநேரம் மேஜையினருகிலமர்ந்து, தான் இழந்த ஆநந்தத்திற்கும் மணிநேரங்களுக்கும் பதிலாக ஆண்டுவிழாக்கள் தோறும் வெகுமதி பெறுவதிலும், இயற்கைச் சுபாவத்தை யோர்ந்து அவைகளின் உணர்வையறிந்து, தன் அறிவு இலங்க, இரத்த ஓட்டத்தையும், இருதயத் துடிப்பையும் விரும்பி, இன்பதுன்பங்கள் மறந்து, ஒரு பந்தையோ அல்லது பட்டுப்பூச்சியையோ தொடர்ந்துஓடவும், சுத்த ஆகாயம் தன் முகத்தில் வீசுவதையுணரவும், தனக்குத் தெரிந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் இடையில் நேரிடும் சிறு சச்சரவுகளில்சேரவும், விரும்புகின்றான். தினசரிப்பாடங்களைப்படிக்கவும், கல்விக்கழகங்களின் பட்டங்களைப் பெற்றிடவும் இயலாது தடுத்து நிற்பதும் அறியாமையே எனினும், பெரும்பாலும் அறிவின்மை என்பது அத்தகைய கல்வியைக் கற்றிடுவதில் ஊக்கமின்மையே யாகும். சிறிதும் அறிவில்லா மூடர்கள், கல்வியைக் கற்க இயலாது தவிப்பதுபோலும் பெரும்பாலும்பேரறிவு வாய்க்கப்பட்டவர்கள் தவிக்கின்றனர். நம்முடைய பேரறிஞர்கள் ஒவ்வொருவரும், பள்ளியிலேனும், கல்விக்கழகத்திலேனும், பெரும் பெயரெடாமலிருந்தது ஈண்டு நோக்கற்குரியது. அன்னார் கல்விமுறையின் நியதிகளையும் அத்தகைய முறையால் வரும் பயனையும் பெரிதும் போற்றுவதில்லை.

நூற்கல்வியென்பது மற்றவர் அறியாதது; புத்தகங்களினின்றும் அத்தகைய இயற்கை மூலங்களினின்றும் உய்த்துணரும் ஞானமேயாகும். நம் கண்முன் புலனாவதும், நம்மைச் சுற்றிப் பொலிவதும், நம்முடைய அநுபவத்தையும் மனப்பான்மையையும் உள்ளநாட்டத்தையும் வலுப்படுத்துகின்றவைகளைப்பற்றிய ஞானம் கல்வியன்று. கற்றவர்களல்லால் மற்றவர்கள் கற்றறிவதற்கறியா ஞானமே நூற்கல்வியாகும். ஐயமும் திரிபும் கடினமும் நிறைந்து பண்டைக்காலத்திலிருந்து பாரம்பரையாக உரைக்கப்பட்டு வருவதும், அநுபவப் பிரமாணத்திற் கெட்டாததும், காட்சிப் பிரமாணத்திற்கும் சாதாரண வாழ்க்கைக்கும் எட்டாததுமான விஷயங்களைப்பற்றி எவன் அதிகமாக அறிந்துள்ளானோ அவனே அதிக கல்வி யறிவு வாய்க்கப்பட்டவனாவன். அது மற்றவர்களுடைய கண்களைக் கொண்டு பார்ப்பதையும், அவர்களுடைய செவிகளைக்கொண்டு கேட்பதையும், அவர்களுடைய அறியுந் திறனில் நம்பிக்கை வைத்தலையும் ஒக்கும். கற்றவன் பெயர்களிலும் தேதியிலும் அறியும் ஞானத்தில் கர்வங் கொள்கின்றான்; மனிதனைப்பற்றியும், பொருள்களைப் பற்றியும் அவனறியான். அயல் வீட்டுக்காரர்களைப்பற்றி, அவன் ஒன்றும் அறியானெனினும், பண்டைக்காலத்துஜாதி குலம், முதலியவைகளைப்பற்றி அவன் அதிகம் படித்துள்ளான். கான்ஸ்டாண்டிநோபலைப் (Constantinople) பற்றியும் பெக்கினைப் (Pekin) பற்றியும் அவன் அதிகம்அறிவானெனினும், அடுத்த வீதிக்குச் செல்லும் வழியை அவன் அறியான். தன்னுடைய பழைய நண்பன் திருடனோ இன்றேல் மடையனோவென அவனால் அறிய இயலாதெனினும், சரித்திரத்தில் காணப்படும் பெரியார்

களைப்பற்றிப் பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவான். ஒரு குருடனுக்கு நிறங்களைப்பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவு அவனுக்குத் தான் பேசும் விஷயங்களைப் பற்றித் தெரியும். வழக்கொழிந்த மொழிகளிலும் அவன் பாண்டித்ய முடையவனெனினும், தன்னுடைய தாய் மொழியில் பிழையில்லாது பேசவும் எழுதவும் அவன் அறியான்.

புத்தகங்களை யல்லால் மற்றொன்றும் அறியாத கற்றவன் அப்புத்தகங்களைப் பற்றியும் ஒன்றும் அறியான். "புத்தகங்கள் புத்தகங்களின் உதவியைக் கற்பிக்கமாட்டா." ஒரு நூலில் கூறப்பட்டுள்ள விஷயத்தைப் பற்றி ஒன்றுமறியா ஒருவன் அந்நூலைப்பற்றியென்னவறிய வியலும்? பல புத்தகங்களை முதல் நூற்களாகக் கொண்டு படிப்படியாகத் தோன்றிய புத்தகங்களையே அவன் அறிவான். மற்றவர்களிடத்திலிருந்து அறிந்தவர்களுடைய கருத்தைக் கிள்ளைப் போலும் இவன் படிக்கின்றான். ஒரு வார்த்தையைப் போலும் பத்து பாஷைகளில் எழுத அவனால் இயலு மெனினும், அவ்வார்த்தை குறிக்கும் பொருளை அவன் அறியான். இருதயத்தையும் அறிவையும் புலன்களையும் பூட்டிவிட்டு அவன் தன்னுடைய தலையை, அதிகாரங்களினின்றும் பிறந்த அதிகாரங்களாலும், மற்ற இடத்திலிருந்து எடுத்துக்காட்டாக எடுத்துக்காட்டியுள்ள மேற்கோள்களாலும் நிறைத்துக் கொள்கின்றான். உலக நடத்தையிலும், முது மொழிகளிலும் அவனுக்குப் பயிற்சி கிடையாது. இயற்கையிலும் சிற்பத்திலும் அவனுக்கு அழகு புலனாகவில்லை. அவனுக்குக் கண்களாலும், செயலினாலும் அறிதற்குரிய உலகம் மறைந்து கிடக்கின்றது. ஓவியங்களைப் பற்றி அவனொன்றும் அறியான். இயற்கையினுடைய பாஷையையும், சிற்பத்தின் பாஷையையும் அறிய அவனால் இயலாது. அதற்கேற்பச் சங்கீத ஞானம் அவனுக்குச் சிறிதுங் கிடையாது. அவனுடைய செவிகளும் புத்தகங்களையே அறியும். இசைநூலைப் பற்றி ஏதேனும் அவன் அறிவனோ? ஒரு விருத்தத்தி லுள்ள சீர்களையும், ஒரு நாடகத்தின் காட்சிகளையும் அவன் அறிவான். ஆனால் அவைகளின் உள்ளர்த்தத்தை அவன் உணரான். அவன் கற்ற கல்வி, வீடு அமைப்பதற்கும் பயிரிடும் சாஸ்திரத்திலேயும், இரும்பு மரம்முதலிய சாமான்களைச் செய்வதிலேயும் அவனுக்குப் புலமை யளித்திடாது. தன்னுடைய கரங்களையுங் கால்களையும் அவன் உபயோகிப்பதில்லை; ஓடவும் நடக்கவும் நீந்தவும் அவன் அறியான்; அவ்வாறு செய்யக் கூடியவர்களைக் கண்டாலும் அவர்களைத் தன்னினுந் தாழ்ந்தவர்களாகக் கருதுகின்றான்.

உண்மையில் மனிதன் அறிந்ததெல்லாம் தினசரி விஷயங்களையும் அநுபவத்தையும் பற்றிய விஷயங்களேயாகும். மற்றவைகளெல்லாம் வெளிவேடமே யாகும். ஏழைமக்களோ தங்களுடைய அங்கங்களை உபயோகிக்கின்றார்கள். ஏனெனில், தங்களுடைய உழைப்பினாலேயே அவர்களுடைய வாழ்க்கையை அவர்கள் நடத்தவேண்டியிருக்கின்றது. தங்களுடைய தொழிலையும் அத்தொழிலைப் பற்றியவர்களையும் அவர்கள் அவசியம் அறியவேண்டியிருத்தலான், அவர்கள் அதனை அறிகின்றார்கள். தங்களுடைய மனோநிலையை ஓதுதற்குரிய வாக்கு வன்மையும், வெறுப்பையுஞ் சிரிப்பையும் மூட்டுதற்குரிய அறிவும் அவர்களுக்கு இயற்கையில் அமைந்திருக்கின்றது. இலக்கண இலக்கிய வரம்புகளை அவர்கள் அறியார்கள். பொது மக்கள் அரங்கத்திலிருந்து (House of Commons) அறிவதைவிடப் பெருண்மைகளை ஒரு சாராயக்கடையில் நடக்கும் சம்பாஷணையிலிருந்து அறிய ஒல்லும். ஒரு சாதாரண நாட்டு மாதினிடம் சென்ற ஐம்பதாண்டுகளின் சரிதையை, கற்றொருவன் அவ்வமயத்தைப்பற்றி எழுதியுள்ள எண்ணிறந்த புத்தகங்களைப் படித்து அறிவதைவிட அதிகமாகவும்

விளக்கமாகவும் திருஷ்டாந்தங்களுடனும் அறியலாம். படித்தவர்கள் நாட்டைப்பற்றியும் நகரத்தைப் பற்றியும் உண்மையில் ஒன்றும் அறியார்கள். கல்லாத மக்களுக்குச் சுய அறிவு மிகவும் உண்டு.

நூற்கல்வியால் பெறும் பயன் இஃதேயாகும். அவர்கள் காணும் பொருள்களையும் புத்தகங்களில் வாசித்தறிந்தவாறு காண்கின்றார்கள். உண்மையான பொருள் அவர்களுக்குப் புலனாவதுமில்லை. புலனாயின் தாங்கள் பயின்ற உண்மைகளுக்கு முரண் ஏற்படுமென்றஞ்சி அவர்கள் கண்களை மூடிக் கொள்கின்றார்கள். உண்மையையும் உபயோகமானவைகளையும் அறிய நம்முடைய மானிட அறிவு எவ்வளவு சிறிது உபயோகிக்கப்படுகின்றது. தத்துவஆராய்ச்சியிலும், நியாயம், அரசாங்க நூல், ஜோதிஷம், பொன் செய்யும் வித்தை முதலியவைகளை அறிவதிலும் எவ்வளவு நேரமும் அறிவும் வியர்த்தமாகின்றன. பண்டை நூற்களிலிருந்து உண்மையாக நாம் பெறும்பயனென்ன?

மக்கட் கூட்டத்தில், தாங்கள் கண்டவைகளையும் அறிந்தவைகளையும் பற்றித் தர்க்கிக்கும் உலகியல் உணர்ந்தவர்களே பேரறிஞராவர். பெண்மக்களே ஆடவர்களைவிட அதிக கல்வி யறிவு பெற்றவர்களாவர். அவர்களுக்கு அதிக வேடமில்லை; கடின நியதிகளை அவர்கள் அறியார்கள். தாங்கள் காணும் பொருள்களைத் தங்களுடைய இயற்கை நினைவிற்குத் தோன்றியவாறு கொள்வதால், அவை உண்மையாகவும் இயற்கையோடியைந்தும் இருக்கின்றன; அவர்கள் தர்க்கிப்பதே இல்லையாதலால் தவறாகத் தர்க்கிப்பதில்லை. சில நியதிகளையும் வரம்புகளையும் கொண்டு அவர்கள் பேசுவதில்லையாதலால், அவர்களுக்குச் சாதாரணமாக வாக்கு வன்மையும், அறியும் சமயோசித யுக்தியும் அதிகமாக இருக்கின்றன. மேலோதிய இயற்கைத் தன்மைகளால் அன்னார் தங்களுடைய கணவர்களை ஆண்டு வருகின்றனர். அவர்கள் தங்களுடைய நண்பர்களுக்கு லிகிதம் எழுதுங்கால் உபயோகிக்கும் நடை (Style) ஆசிரியர்களுடைய நடையைவிட அழகாக இருக்கின்றது. ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் பெரியாரின் உள்ளம் கல்வியின் வரம்புகளறியா உள்ளம்; அவருடைய ஒப்பற்ற மனோபாவத்திற்கும் வித விதமான கருத்துக்களுக்கும் அஃதே காரணமாகும். ஆனால் மில்டன் (Milton) என்பவருடைய உள்ளமும் கருத்துக்களும் உணர்ச்சிகளும் கல்வியின் வரம்புகளுடனும் பொலிகின்றன. மக்களுடைய இயற்கைப் புலமையையறிய ஷேக்ஸ்பியரினுடைய நூற்களை வாசிக்கலாம். நூற் கல்வியின் இழிவை யறிய ஷேக்ஸ்பியருடைய நூற்களுக்கு உரை கண்ட உரையாசிரியர்களைப் படித்தல்வேண்டும்.

இருவினை

[நோன்பி]

இந்நில உலகில் பிறக்கும் மனிதர்களே பரமுத்தி எய்துதற்கு உரியர். மற்றைய அண்டங்களில் வசிப்பவர் பதமுத்தி நிலைகளில் நின்று தாங்கள் ஈட்டிய புண்ணியத்தின் பலனை அனுபவித்த பின்னர் இவ்வுலகிற்கே வர வேண்டும் என்றும், அவ்வண்டங்கள் போக பூமிகள் என்றும், இவ்வுலகு ஒன்றே கர்மபூமி என்றும் அறிஞர்கள் சொல்வர். இதில் மக்கள் தங்கள் நல்வினை தீவினைப் பயன்களை அறவே அனுபவித்து இனி வேறு பிறவிவாராத வழிதேட வேண்டும் என்றும் நம் சாத்திரங்கள் வற்புறுத்துகின்றன. திருமூலர்: “இக்காய நீக்கி இனி ஒரு காயத்தில் புக்குப்பிறவாமல் போம்வழி

"தேடுமின்". ஆகவே, மேலைப் பிறவிக்கு வித்தாகிய அவா என்பதை அறுத்து, ஆகாமியம் (மேல்வினை) விளைய வொட்டாமல் எல்லாம் ஈசன் செயல் என்று நம்கர்மங்களைச் செய்ய வேண்டும் என்பர்; அப்போது பழைய வினையின் தொகுதியாகிய சஞ்சிதம் (தொகை வினை) ஞான அளவில் எரிந்து போய் விடும். இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய பிராரத்தம் (துவக்கவினை) நம் அனுபவத்தால் இத் தேகத்தோடு அழியும் என்பர்.

மேலே கூறிய கொள்கைகளை அங்கிகரிப்பதில் சிலருக்கு ஒரு சந்தேகம் நிகழும்; அதாவது, "முற்பிறவிகளில் செய்த இன்ன வினையின் பயனாக இப் பிறப்பில் இன்ன சுகதுக்கம் அனுபவிக்கிறோம் என்னும் அறிவு நமக்கு ஏன் இல்லை" என்பதே. அதற்குச் சிலர் "நாம் அவ்வினைகள் காரணகாரியத் தொடர்பை அறியாமலிருக்குமாறு இறைவன் செய்துளார்" என்பர். அல்லது, "பூர்வவினை சம்பந்தத்தை அறிவது திரிகாலமும் உணரும் ஞானிகளுக்கே இயலும்" என்பர். இவ்வுத்தரங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

பூர்வவினை சம்பந்தத்தை ஞானிகளே அறிவர் என்றுசொல்வதற்கில்லை. ஏனெனில், இராவணனும் தன்னை அழிக்க வந்த சீதை முற்பிறப்பில் வேதவதியாயிருந்து தனக்குச் சாபம் கொடுத்தவள் என்று அறிந்திருந்தான். வங்காளத்தில் ஒரு பெண் குழந்தை தான் பிறந்த ஊருக்குச் சிறிது தூரத்தில் உள்ள வேறு கிராமத்திற்குப் போனதும், அங்கே தான் முந்திய பிறவியில் கிழவியா யிருந்தபோது தான் குடியிருந்த வீட்டை யடைந்து தன் குழந்தைகளுடன் சம்பாஷித்ததும் பத்திரிகையில் சிலவருடங்களுக்குமுன் வெளிவந்ததை நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆகவே, ஞானிகள் தவிர மற்றையோர்களும் பூர்வ ஜன்ம உணர்ச்சியைப் பெறக்கூடும் என்று அறிகிறோம். ஆனால் சாதாரணமாய் அப்படிப்பட்ட உணர்ச்சி இல்லாததுகண்கூடு. அப்படி உணர்ந்தாலும் அதனால் பெரும்பாலும் நற்பயன் ஒன்றும் இராதென்றே சொல்லலாம். உதாரணமாக மணிமேகலையில் கோவலன் இறந்ததின் காரணத்தைத் தனக்கு ஓர் தெய்வம் அறிவித்ததாகக் கண்ணகி கூறுகின்றாள். (மணிமேகலைகதைச்சுருக்கம் 158 சுவாமிநாதய்யர் 2-ம் பதிப்பு) அப்படித் தெரிந்த பின்பும் தன்கோபம் அடங்காததால் அவள் மதுரை நகரைத் தீக்கு இரை யாக்கினள். தசரதன் தன் மகன் இராமனைவிட்டுப் பிரிந்ததற்குக் காரணம் அப்பிறப்பிலேயே ஒரு ரிஷி புதல்வனைத்தான் அம்பினால் கொன்றது என்று கௌசலைக்குத் தெரிவிக்கிறான்; ஆனால் அவ்வறிவு தன் துயரத்தை ஒரு சிறிதும் தணிக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ண பகவான் தம் காலின் பெருவிரலில் ஒரு வேடன் பாணம்பட்டு இறக்க நேர்ந்தது முற்பிறப்பில் அவ்வேடன் வாலியாயிருந்த போதுதான். இராமபாணத்தினால் அவனை மறைந்திருந்து எய்தது என்று உணர்ந்தார். ஆயினும் அவ்வறிவைக் கொண்டு அவர் தம் மரணத்தைத் தடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே இன்ன வினையால் இன்ன துக்கம் நேர்ந்தது என்னும் சக்தி நமக்கு இல்லாததால் நமக்கு ஒரு கஷ்டமும் இல்லை என்பது திண்ணம். அதற்குப்பதிலாக அவ்வறிவு ஒரு விதத்தில் துன்பமும் தரக்கூடும். ஆகையால்தான் "அறிவின்மையே சுகம் தருவதாயிருக்க அறிய முயல்வது மூடத்தனம்." (While ignorance is bliss, it is folly to be use) என்னும் கருத்துடைய ஆங்கிலப்பழமொழி எழுந்ததுபோலும். கர்னன் தன் உண்மைப் பிறப்பை உணர்ந்ததும் அர்ச்சுனனிடம் மும்முரமாய்ச் சண்டை செய்திருக்க முடியாது என்று நாம் ஊகிக்கலாம்; அர்ச்சுனனும் கர்னன் தன் தமையன் என்று அறிந்திருந்தால் பாரத யுத்தமே நடவாமற் போயிருக்கலாம். மேலும், அறிவின்மையும் ஒரு விதத்தில் அநுகூலமே என்னலாம். இந்திரசித்து இறந்த பிறகு அவன் மனைவி சுலோசனை, முன் விழுந்த அவன் கையைக் கொண்டு இராமரிடம் அவள்

சென்று அவன் உடம்பைத் தகனம் செய்ய உத்தரவு பெற்றாள். அப்போது அவளிடம் அனுதாபங்காட்டிய இராமர் மேல் சீறி விழுந்த இலட்சுமணர் தன் தமையன் உதவியால் அவள் முன் பிறவியில் தன் மகள் என்று உணர்ந்து அழுகிறான். இப்படிப்பட்ட வருத்தங்கள் நேரிடாதிருக்கவே நாம் நம்பழைய பிறவி உணர்ச்சியை இழந்து விடுமாறு இறைவன் தன்மாயையில் நம்மை அமிழும்படி செய்கிறார் என்று பக்தவிஜயத்தில் கபீர்தாஸ் பிறப்பின் சம்பந்தமாகக் கூறியிருப்பதால் அறிகிறோம். அந்தச் சக்தி திரோதான சத்தியாகும். அதனால் மாயை கன்மம் தொழில் செய்யத் தொடங்கி நம் ஆணவமலத்தை ஒழிக்க இறைவன் நமக்கு உதவி செய்கிறார் என்பர். இதனால்தான் சுவாமி மலை திருப்புகழ், "ஒருவரை ஒருவர் அறியாமலும்........." என்று முழக்குகிறது. தாயுமானவரும், "அறிவினை மறைப்பதும் நின்னருளே" என்பர். திருவாசகத்திலும், "மானோர் நோக்கி மணவாளா......நின் சீர் மறப்பித்து இவ்வூனேபுக என்றனை நூக்கி" என்று கூறியிருப்பதால், நாம் பிறக்கும்போது நமக்கு இருக்கும் இறைவன் உணர்ச்சியைப் பிறந்தவுடனே இழக்கிறோம் என்று அறிகிறோம். (Words - worth Trailing clouds of glory do we come, from God who is our home). ஆகவே, முற்பிறப்புகளை மறப்பிப்பது; கருவில் உள்ளபோது இருந்த கடவுள் உணர்ச்சியைப் பிறந்தவுடன் மறப்பது முதலியவை மறைப்புச் சக்தியாய்த் திரோதாயி மூலமாக நேரிடும் சம்பவங்கள் என்றும் அவைகளின் இரகசியம் நாம் அறியாதது நமது நன்மைக்காகவே என்றும் சொல்லலாம். தாயுமானவரும் இந்த வினைகளைப்பற்றிய இரகசியத்தின் காரணம் தமக்குப் புலப்படவில்லை என்று, "தன்னையே நோவனோ பிறரையே நோவனோ தற்காலமதை நோவனோ பந்தமானது தந்த வினையையே நோவனோ பரமார்த்தம் ஏதும் அறியேன்" என்பதால் தெரிவிக்கிறார். ஆகவே, வினைகளின் காரண காரிய நிகழ்ச்சியை நாம் ஆராய்வதைவிட, அவ்வினைத்தொடர்பை இறைவன் அருளால் அறுக்க முயல்வதே அறிவுடைமை என்று அறிந்து நாம் தக்கபடி ஒழுகுவோமாக.

நமது நாட்டில் வழங்கும் பழங்கதைகள்

[சோமசுந்தர தேசிகர்]

நம் நாட்டுச் சிறுவர்கள் ஆவலோடு படிக்கும் கதைகளுள் பஞ்சதந்திரக் கதையு மொன்று. இது பல மொழிகளிலும் வழங்கி வருகின்றது கொண்டே இதன் பெருமை யொருவாறு விளங்கும். மனமகிழ்ச்சியே பொருளாக எழும் கதைகளைப் போலன்றிப் பஞ்ச தந்திரக் கதைகள் அறிவை விளக்கவல்லன. இப்படிப்பட்ட கதைகளுள் பெரு வழக்கிலிருப்பது குரங்கு முதலையை ஏமாற்றிய கதையாகும். இது 'நாளை வரும் விளாம்பழத்திலும் கையிலுள்ள களாப்பழம் மேல்' The bird in the hand is worth two in the bush என்ற பழமொழிகளின் பொருளை விளக்குவது. கதைச் சுருக்கம் வருமாறு:—கங்கைக் கரையில் நாவல் மரத்தின்மேற் சுமுகனென்னொரு வானரம் இருந்தது. மரத்தடியில் இளைத்த முதலை யொன்று வந்தது. அதனைக் கண்ட குரங்கு அது இளைத்திருப்பதைக் கண்டு சில நாவற் பழங்கள் தந்தது. அதனை யுண்டு களைப்புத் தீர்ந்த முதலை 'உண்டு ருசி கண்டவனும்....கண்டவனும் போகான்' என்பது போல, நாள்தோறும் அங்கே வந்து குரங்கோடு உறவாடிப் பழங்கள்

வாங்கித் தின்று செல்லும். ஒருநாள் முதலை குரங்கு கொடுத்த நாவற் பழங்களுள் சிலவற்றைத் தம் மனைவிக்குக் கொண்டு போய்க் கொடுத்தது. அவற்றையுண்ட பெண் முதலை அவற்றின் இனிப்பைக் கண்டு தன் கணவனைப் பழங்கள் வந்த விதத்தைக் கேட்டது. ஆண் முதலை தனக்கு ஒரு குரங்கு நண்பன் இருப்பதாகவும் அவன் நாவற் பழங்கள் ஏராளமாகக் கொடுப்பதாகவும், அன்று கிடைத்தவற்றில் தானுண்டு எஞ்சியவற்றைத் தனது மனைவிக்குக் கொண்டு வந்து கொடுத்ததாகவும் கூறிற்று. இதனைக் கேட்ட பெண் முதலை ஆண் முதலையைப் பார்த்து 'இந்த நாவற்பழமே இவ்வளவு இனிப்பாயிருந்தால் இப்பழங்களையே ஆகாரமாகக் கொள்ளும் குரங்கின் ஈரல் மிக இனிப்பா யிருக்குமே; அதனை யெனக்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டும்; கொடுக்காவிட்டால் உயிர் வாழேன்' என்றது. ஆண் முதலை 'நீ நட்புக்குத் தீங்கிழைக்கிறாய், அது தகாது' என்பது போன்ற சொற்களை எவ்வளவு சொல்லியும் அது கேளாததால் முதலை ஒரு தந்திரஞ் செய்ய எண்ணிக் குரங்கு இருக்குமிடத்திற்கு வந்தது. குரங்கைக் கண்டு 'நண்பனே! உன் மைத்துனி நான் நாடோறும் பழம் வாங்கி யுண்பதற்காகக் கோபிக்கின்றாள்; உன்னை யழைத்து விருந்து செய்ய விரும்புகிறாள்; வரவேண்டு'மென்று சொல்ல, வானரம் 'நீ நீரில் வாழ்பவன்; நான் எப்படி வருவே'னென்ன, முதலை தன் முதுகில் ஏறிக் கொண்டால் நீரில் படாமல் வீட்டிற்குக்கொண்டு போவதாகக் கூறிற்று. அதனைநம்பி வானரம் முதலையின் மேலேறிக் கொள்ள முதலை நீரில் விரைவாகப் போயிற்று. அதனைக் கண்டு அஞ்சின குரங்கு சற்று மெல்லப் போகும்படி முதலையை வேண்ட முதலை குரங்கைக் கொல்லப் போவதாக உண்மையைக் கூறிற்று. இதனைக் கேட்ட வானரம் பயந்தபோதிலும், தைரியத்தைக் கைவிடாது, 'நண்பனே இதனை முன்னமே கூறியிருந்தால் மரத்தில் மாட்டி வைத்திருக்கும் எனது ஈரலைத் தந்திருப்பேனே, இதற்கு இவ்வளவு கஷ்டப்படவேண்டுவதில்லையே' என்றது. இதனைக் கேட்ட முதலை மகிழ்ச்சி கொண்டு குரங்கை மறுபடியும் மரத்தடியிற்கொண்டு வந்து சேர்த்தது. குரங்கோ உயிர் பிழைத்தோமென்று மரத்திலேறிக் கொண்டது. இதனை யொத்த ஜாதகக் கதை வருமாறு:—

சிம்சுமார ஜாதகம்

பிரமதத்தன் காசியிலே அரசாட்சி செய்து கொண்டிருக்கையில் போதிசத்துவர் இமயமலைச் சாரலில் வானர உருவெடுத்து வாழ்ந்து வந்தார். அப்பொழுது கங்கையில் ஒரு முதலை தன் மனைவியோடு வாழ்ந்து கொண்டிருந்தது. நல்ல அவயவங்களோடு நடமாடும் குரங்கைக் கண்ட பெண் முதலை அந்தக் குரங்கின் ஈரலைக் கொண்டுவந்து கொடுக்கும்படி ஆண் முதலையைக் கேட்டது. குரங்கைப் பிடிப்பது எளிதான காரியமல்லவென்று பெண் முதலைக்கு ஆண் முதலை எவ்வளவு சொல்லியும் அது கேட்கவில்லை. பின்னர் ஆண் முதலை ஒரு யுக்தி செய்தது. அது குரங்கைக் கண்டு அக்கரையில் மா, பலா முதலிய பழங்கள் ஏராளமாக இருப்பதாகவும் வானரம் முதலையின் முதுகில்ஏறிக்கொண்டால் அக்கரைசேர்ப்பதாகவும் கூறிற்று. இதனைக் கேட்ட குரங்கு பழ ஆசையால் முதலையின் முதுகில் ஏறிக்கொண்டது. சிறிது தூரம் கங்கையிற் சென்றவுடன் முதலை குரங்கைத் தண்ணீரில் அமிழ்த்த முயன்றது. குரங்கு முதலையை இவ்வாறு செய்யக் காரணமென்னவென்று கேட்டபோது, அது தன் மனைவியின் இச்சையைத் தெரிவித்தது. குரங்கு தங்களினம் மரம் விட்டு மரம் பாயும் இனமாதலால் தாங்கள் எப்பொழுதும் ஈரலை ஒரு மரத்தில் மாட்டி வைப்பது வழக்கமென்றும், தானும் அதனையொட்டிப்பக்கத்திலுள்ள அத்தி மரத்தில் ஈரலைத் தொங்க விட்டிருப்ப

தாகவும் கூறவே, முதலை குரங்கை மரத்தடியிற் கொண்டுபோய் விட்டது. குரங்கு உடனே மரத்திலேறிக் கொண்டது. முதலை ஈரலைத் தரும்படி குரங்கைக் கேட்டபோது, குரங்கு முதலையைப் போன்ற மூடாத்மா இல்லை யென்றும், ஈரல் உடலை விட்டுப் பிரிக்க முடியாத ஓர் உறுப்பு என்றும் கூறியதைக் கேட்ட முதலை வெட்கிப் பணயிழந்த பாவிபோல் திரும்பிச் சென்றது.

இக்கதையினால் பல நீதிகள் விளங்குகின்றன அல்லவா?

சுந்தர சுலோசனா

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

"இறைவனை இரந்து இருங்கள்"

தயாநந்தலால் என்னும் பெரும் மார்வாடியினிடத்து நின்றும் நற்சாக்ஷிப் பத்திரம் பெற்று உரிமையுறையுளில் இரண்டாண்டுகளாகக் காவற்காரனாக இருந்துவரும் முருகேசன் மீது ஜயகுமாரன் பெரிதுஞ் சந்தேகங் கொண்டான். எவ்வகையாலும் அவனுடைய உதவியான் உளவறிதல் வேண்டும் என்ற எண்ணம் அவனகத்தில் உதித்தது. தான் உரிமை உறையுளிற்கு வந்ததிலிருந்து உள் உளவாக இருந்து தன்னுடைய விரோதிக்கு அடிக்கடி எல்லா விஷயங்களையும் அறிவுறுத்தியவன் முருகேசனேயாவன் என்ற எண்ணம் அவனைப் பிடித்தது. பூட்டப்பட்டிருந்த தன்னுடைய அறையில் "சண்முகம்" என்னும் பொய்க் கையொப்பமிட்ட கடிதம் வைத்தவனும் அவனே என்றும் அவன் சந்தேகித்தான். இரவில் உரிமையுறையுளின் கதவங்களைப் பூட்டிக் காவல் புரியும் பொறுப்புடைய அவனே, தான் மோகனசுந்தரத்தின் அறையுள் நுழைந்து துப்பகப்படுமோ என ஆராயுஞ் சமயம் பார்த்துத் தன்னுடைய அறையுள் நுழைந்து தன்னுடைய அறையுள்ளிருந்த தன்மேஜையின் மீது தன் விரோதியின் கடிதத்தை வைத்தவன் என்றும் அவன் உன்னினான். முருகேசன் நற்சாக்ஷிப்பத்திரம் பெற்ற தயாநந்தலால் யார் என்று அறிந்தாலல்லான், தன்னுடைய உண்மை விரோதியைக் கண்டறிய இயலாதென அவனுக்குத் தோன்றியது.

மேலோதிய எண்ணங்கள் அவன் அகத்தில் உதித்ததும் தன்னுடைய பணியாளனாகிய சத்தியநாதனை ஜயகுமாரன் விளித்தான்.

"சத்தியநாத, இங்குக்காவற்காரனாக இருக்கும் முருகேசனை நீ அறிவாயே."

"அறிவேன் ஐய! நான் இங்கு வந்த உடனே அவன் என்னுடன் சிநேகஞ் செய்துகொண்டான். அவன் என்னிடத்திலிருந்தும் சில உண்மைகளை அறிய எண்ணிச் சில கேள்விகளைக் கேட்டான். அவன் கேட்ட முறைகளை நோக்கும்பொழுதே அவன் உம்மையும் என்னையும் அறிவானெனவும், இயன்ற வரையில் நம்மிடத்திலிருந்து நாம் இந்தக் கேசில் எவ்வளவு அறிவோமெனவும், யார் மீது சந்தேகங் கொண்டிருக்கிறோம் என்றும் அறிய விரும்பினான் எனவும் நான் உணர்ந்து அவனுக்குச் சந்தேகம் அளியாதவாறு வார்த்தையாடினேன். மேலும் ஐய! அவன் சண்முகசுந்தரப் பிரபுவையும் மோகனசுந்தரத்தையும் மிகவும் இழிவாகப் பேசி, அவர்கள் மிகவும் ஒழுக்க ஈனர்களெனவும் அறைந்தான். எனவே, அவன் நாம் சண்முகசுந்தரப் பிரபுவின் மீதும் மோகனசுந்தரத்தின் மீதும் பெரிதும் சந்தேகங்கொள்ள வேண்டு

மென்றே அவ்வாறு பேசினனெனவும் விளங்குகின்றது. அஃதல்லாமல் ஐய! நாம் இங்குவந்த இரவு எனக்குத் தெரியாத ஒரு காரியத்தை நீர் செய்தீர். நீர் ஒருவரும் அதனைப் பார்க்கவில்லை என்று எண்ணியுள்ளீர். ஆனால், நீர் திருடனைப் போலும் கரிய அங்கியை யணிந்து மோகனசுந்தரத்தின் அறையைக் கள்ளச்சாவியிட்டுத் திறந்துசெல்லுங்கால், இருவர் உம்மைக்கவனித்துக் கொண்டிருந்தார்களென நீர் அறியீர்.''

''சத்தியநாத! நீ கூறுவது உண்மைதானா? அவர்கள் யார்? நீ யொருவன் என்று விளங்குகின்றது.''

''ஆம் ஐய, நான் இந்த உரிமையறையுளில் பணியாளனா யிருக்கும் ஒருவனைக் கவனித்தேன். அவன் உம்மைக் கவனிப்பதறிந்தேன். உம்முடைய பணியாளனாகிய நான் உமக்கு ஓர் ஆபத்தும் வாராது காத்தலே என்னுடைய முக்கிய கடனென நன்குணர்வேன். எனவே, நான் அவனைக் கவனிக்க நேர்ந்தது. அப்பொழுது அவன் நீர் அறையுள் சென்றதும் உம்முடைய அறையைத் திறந்து உள் நுழைந்தான். நுழைந்த சில நிமிடங்கள் கழிந்ததும் அறையுள்ளிருந்து வெளிப் போந்தான். எங்கும் இருள் சூழ்ந்திருந்தமையான் அவ்வறையுள் என்ன செய்தான் என்று நான் அறியேன். ஆனால், அவன் அறையுள்ளிருந்து வெளிச் சென்றதும் நான் அவனைத் தொடர்ந்து சென்றேன். அவன் அவ்விருளில் உரிமையறையுளை விட்டுச் செல்வது கண்டேன். அவ்வேளையில் அவன் வெளிச் செல்லுதற்கு ஒரு முக்கிய காரணமிருத்தல் வேண்டுமென எனக்குத் தோன்றியது. எனவே, நான் அவனைத் தொடர்ந்து சென்றேன். அவன் நேராக உரிமையறையுள் சாலையின் வாயிலாகச் சிறிது தூரஞ் சென்றான். ஆங்கு ஓர் ஆள் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

'முருகேச!'

'ஆ! நடராஜ!'

'அக்கடிதத்தை வைத்துவிட்டாயா?'

'வைத்துவிட்டேன். ஆனால் வேறொரு முக்கிய சமாசாரம் கூற வேண்டும்' என்று மிகவும் இரகசியமாக ஏதோ இயம்பினன். அம்மொழிகள் என் செவிப்படவில்லை. ஆனால் நீர் கரிய அங்கியைத் தாங்கி மோகன சுந்தரத்தின் அறையுள் சென்ற விஷயத்தைப்பற்றியே அவன் கூறியிருப்பானெனத் தோன்றுகிறது.''

''சத்திய நாத! பின்னர் நடந்த தியம்பு.''

''பேசியவுடன் நடராஜனிடம் விடை பெற்றுக் கொண்டு முருகேசன் உரிமையறையுளுக்குத் திரும்பினன். பின்னர் யான் ஒளிந்து நடராஜனைத் தொடர்ந்து சென்றேன். அவன் உரிமை யறையுள் சாலையின் கோடியிலுள்ள ஒரு மாளிகையுள் நுழைந்தான். அவனைத்தொடர்ந்து சென்ற யான் அம்மாளிகையின் வெளிக் கதவத்தில் பதிக்கப் பட்டிருந்த எண்ணை அறிந்தேன். நான் இருட்டில் எவ்வாறு உணர்ந்தேன் என நீர் ஐயுறலாகும். ஆனால், நடராஜன் அம்மாளிகையுள் நுழைந்த சில நிமிடங்களில் ஒருபெரிய மோட்டார் வண்டி அம்மாளிகையுள்ளிருந்து வெளிப்போந்தது. அதனுடைய எண் 6266. அதனுள் இருந்தவர்களை யான் அறிய இயலவில்லை. ஆனால் உள்ளே இருவரேனும் இருக்க வேண்டுமென நான் உணர்ந்தேன். ''அடே'' என்ற ஒரு சப்தமும் ''அடியேன்'' என்ற ஒரு மொழியும், ''கவ்ரமிகளே'' என்ற ஒலியும் இருவர் உண்மையில் வண்டியிலிருந்தார்கள் என்பதை விளக்கிய தெனினும், ஒருகால் பேசிய இருவரில் ஒருவன் வண்டியோட்டுபவனாக இருப்பினும் இருத்தலாகும் எனவும் எனக்குத்தோன்றுகிறது. அவ்வண்டி சென்னையை நோக்கிச் சென்றது. அவ்வண்டி மறைந்ததும் நான் மெதுவாக என்னுடைய மின்சாரக் கைவிளக்கினுதவியால் அவ்வில்லத்தின் கதவிலக்கம் 60 என உணர்ந்தேன்.''

"சத்திய நாத! மெச்சினேன் உன்னுடைய நுண்ணறிவை. நாம் உடனே சென்னைக்குச் செல்லவேண்டும். வண்டியைக் கொண்டுவா. வழியில் இதர விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். ஆனால் நாம் செல்வதன் முன்னர்ச் சாரதாவைச் சந்தித்துச் சில விஷயங்களை யறிதல் வேண்டும். நான் பதினைந்து நிமிடங்களுள் வந்துவிடுகிறேன். நீ வண்டியைத் தயாராக வைத்திரு".

"அப்படியே ஆகட்டும் ஐய" எனக் கூறிவிட்டுச் சத்தியநாதன் அறையை நீத்துச் சென்றான்.

சத்தியநாதன் அறையை விட்டுச் சென்றதும் ஜயகுமாரன் தன்னுடைய அறையை விட்டு வெளிவர, அங்குச் சுலோசனாவும் சாரதாவும் தனக்காகக் காத்திருப்பது கண்டான். தான் செல்வதன் முன்னர்ச் சாரதாவைச்சந்தித்து வார்த்தையாடிச் சில உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்று தான் எண்ணியதற் கேற்பச் சாரதாவை ஆங்குக் கண்டதும் ஜயகுமாரன் களிப்பெய்தினான்.

"தந்தை நீர் இப்போது சென்னைக்குச் செல்லப் போகின்றீரெனக் கூறினார்கள்."

"ஆம் அம்மா"

"செல்வதன்முன் உம்மைக் காணலாமென இங்கு வந்தேன். என்னுடைய தோழியாகிய சாரதா உம்மிடம் பேச விரும்பினாள்."

"அம்மா சுலோசனா! சில நிமிடங்களுக்கு முன்னால் யானும் உன்னுடைய தோழியாகிய இவர்களை நேரில் கண்டு இரண்டொரு விஷயங்களைக் கண்டறிய வேண்டுமென எண்ணினேன். நான் யாரென ஒருவரிடமுங் கூறலாகாதென இயம்பியும் நீ கூறிவிட்டது பெரும் விசனத்தையே அளிக்கின்றது."

"ஜயகுமாரரே! உண்மையை ஒளித்துப் பொய்பறைய என்மன மெழவில்லையே, யானென்செய்வேன்!"

"அவ்வாறு கூறிவிட்டதால் காரியம் ஒன்றும் கெட்டுவிடவில்லை. அதற்காக நீ வருந்தாதே."

"ஜயகுமாரரே! என்னுடைய காதலர் மீது கள்வனெனும் பட்டஞ் சூட்டப் பட்டதையும் சில நிமிடங்களுக்கு முன் யான் தந்தையினிடமறிந்தேன். அறிந்தவுடன் உம்மைக் கண்டு பேச எண்ணினேன். அவர் திடீரென மறைந்ததாலன்றோ அவர் கள்வனாகவும் சந்தேகப்படுகின்றார்? ஆ! ஈச."

"சுலோசனா! மோகனசுந்தரர் குற்றமற்றவர். நகைகளை யெல்லாங் களவாடியவனைக் கண்டு பிடித்தற்கே யான் இப்பொழுது சென்னைக்குச் செல்கின்றேன். வீண் பழியைத் தாங்கிய மோகன சுந்தரர் அவைகளைக் களவாடவில்லையென நான் உம்முடைய தந்தையினிடமும் இயம்பினேனே!"

"ஆம்! ஜயகுமாரரே சில நிமிஷங்களுக்குமுன்னரேயே அதனையும் அவர் எனக்குக் கூறினார். ஆனால் நீர் காலையில் என்னை வினவிய கேள்விகளை எல்லாம் நான் சிந்திக்கையில் உமக்கும் என்னுடைய காதலர்மீது சிறிது சந்தேகமிருந்ததாகவே விளங்குகின்றது. ஜயகுமாரரே! என்னே! அவருடைய விதி யிருந்தவாறு!"

"அம்மா! நீர் வீண் கவலையுற்றுப் பயனென்! நான் காலையில் உமக் களித்த வாக்கை மறந்துவிட்டீர் போலும்!"

"ஜயகுமாரரே! என்னுடைய துயரை ஒழிக்க வல்லார் நீர் ஒருவரே என நான் அறிவேன். எனினும், மனக்கவலை என்னை வாட்டுகின்றதே. யானென்செய்வேன்?"

"அம்மா சுலோசனா! ஆண்டவன்மீது நின்னுடைய பாரத்தையிட்டு நீர் கவலையற்றிருத்தல் சாலவும் நன்று. அம்மா சாரதா! நான் உம்முடன் சில நிமிடங்கள் உன்னுடைய நலனைக் கருதியே தனித்துப் பேசலாமா?"

"உம்மிடம் பேசுவதற்காகவே நான் வந்தேன்."

"காலம் அதிகமாகிவிட்டது. நான் இவ்விருளில் சென்னைக்குச் செல்ல வேண்டும். செல்வதன் முன்னர் இரண்டொரு கேள்விகளையே நான் உம்மை வினவ எண்ணுகின்றேன். அந்தக் கேள்விகளுக்கு நீ உண்மையான பதிலை யிறுத்தல்வேண்டும்."

"ஜயகுமாரரே! கேளுங்கள்."

"அம்மா! சண்முக சுந்தரப் பிரபுவைப்பற்றிய இரண்டொரு விஷயங்களையே நான் இது போழ்து வினவ விரும்புகின்றேன். அம்மா! உண்மையை நான் உணர்வேன். உன்னுடைய மனக் கவலையையும் இனிதேர்வேன். சண்முகசுந்தரப் பிரபுவுக்கும் உனக்குமுள்ள ஒரு தொடர்பை யான் அறிவேன். சென்ற ஓராண்டாக இருப்பிடந் தெரியாது மறைந்து நிற்கும் அவருடைய இருப்பிடத்தை யறிந்து அவர் தாங்கி நிற்கும் வீண் பழிகளை யெல்லாம் ஒழித்தலே என்னுடைய கடனாகக் கொண்டுள்ளேன். நீங்கள் எண்ணுமாப்போல் ஒழுக்கம் நீத்து, கள்ளுண்ணவும் வேசியருடன் உறவாடவும் அவர் தொடங்கிவிட்டார் என சந்திரசேகரப் பிரபு எண்ணுவது பெருந் தவறெனவே எனக்குத் தோன்றுகின்றது."

"ஜயகுமாரரே! உண்மைதானா நீர் கூறுவது? அவர் வேசியருறவை நாடவில்லை யென்று நீர் கூறுவது உண்மைதானா? கள்ளுண்ணும் கொடும் பழக்கத்தை அவர் கொண்டார் என்பது பொய்யா? ஆ! ஈசா! அஃதுண்மையெனின் அவர் மார்வாடிகளிடத்தில் கடன் வாங்கியதேன்?"

"அம்மா சாரதா! இதில் என்னவோ ஒருபெருஞ் சூழ்ச்சி யிருக்கின்றது. அதனையே நான் ஆராய்ந்தறிதல் வேண்டும். இப்பொழுது யான் எடுத்துக் கொண்ட கேசில் சண்முகசுந்தரப் பிரபுவும் மோகன சுந்தரப் பிரபுவும் சம்பந்தப் பட்டிருக்கின்றார்களென யான் அறிவேன். இந்தக் கேசில் உண்மைக் குற்றவாளியை யான் கண்டுபிடித்ததும் அதன் வாயிலாகவே சண்முகசுந்தரப் பிரபுவும் மோகனசுந்தரப் பிரபுவும் குற்ற மற்றவர்களென்பது தானாகவே புலனாகும். இப்பொழுது நடந்து வரும் விஷயங்கள் சென்ற இரண்டாண்டாக ஒரு கள்வன் செய்துவரும் பெருஞ் சூழ்ச்சியின் பலனென்பதை யான் உணர்கின்றேன். சண்முகசுந்தரத்தின்மீது கொடும் பழிகளைச் சுமத்தி அவர் ஒழுக்க ஈனரென நீங்கள் அனைவரும் எண்ணுமாறு செய்தவனும், மோகன சுந்தரத்தைத் திடீரென மறையுமாறு செய்தவனும், அன்று சந்திரசேகரப் பிரபுவினுடைய இரும்புப் பெட்டியிலிருந்து நகைகளையும், பொருளையுங் கொள்ளை யடித்தவனும், தான் களவாட அப்பழி மோகனசுந்தரத்தின்மீது விழுமாறுசூழ்ச்சி செய்தவனும் அக்கள்வனே யாவன். ஆதலின் நீயும் இவ்வுரிமை யுறையுளிலுள்ள ஏனையோரும் சண்முகசுந்தரம் ஒழுக்க யீனராகிவிட்டா ரெனவும், தூர்த்தருடன் கூடித் தீ வழிப்பட்டாரெனவும், அவ்வுண்மை வெளியாகிவிட்டதெனவுணர்ந்ததும் உரிமை யுறையுளை நீத்து ஓராண்டாக மறைந்தாரெனவும் எண்ணுதல் தவறேயாகும்."

"ஆ! ஜயகுமாரரே! அவர் தன்னுடைய உயிரென மதிக்கும் யானும் அவ்வாறே எண்ணினேன்."

"அம்மா! அவ்வாறு நீ எண்ணியது உன்னுடைய தவறன்று. அப்பெருங் கள்வனுடைய சூழ்ச்சியான் நீ அவ்வாறு எண்ணினாய். சில தினங்களில் நீ மீண்டும் உன்னுடைய காதலரைப் பெறுவாய்."

"ஆ! ஈச! குற்றமறியா அவர் வீண் பழிகளைத் தாங்கி எங்குற்றனரோ? ஓராண்டாக உணவும் உடையும் பொருளுமின்றி எங்கு இடிப்புண்டு திகைக்கின்றாரோ? ஏ! முருக! தாய்மையுடையவனெனக் கருதப்படும் நீயும் உன் மெய்யடியாராகிய என் காதலருக்கு ஆபத்து நேர்ந்த வமயத்தில் உதவியாற்றாது வாளா இருந்ததேன்? தாய்மை மிகுந்த என் காதலர் வீண்பழித்

தாங்கி துச்சிற் கிடந்து துயருற நீ அடியார்க் கடியனெனப் பெரும் பெயர் பூண்டுப் பெருமையுடன் சிறக்க இலங்குவதேன்! உன் அடியார்க் காபத்து வாராமல் காத்தல் உன்னுடைய கடனன்றோ? ஜயகுமாரரே! என்னுடைய இன்னுயிரனைய காதலரை எனக்கு மீண்டும் அளிப்பீரா? அவர் குற்றம் அற்றவரென்பதை உலகம் அறியுமா? உலகினர்-அவரை-உண்மையை ஓராது நாவில்நரம்பில்லாது பழிக்கின்றனரே.''

“அம்மா! சாரதா! நீ கவலையுறாதே. “மருவுமடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப்பெருமா”னாகிய முருகன் மறந்தும் தன் மெய்யடியார்களைக் கைவிடான். “அயனென வாகி அரனென வாகி அரியென வாகி அவை மேலாய்” முழுமுதற் கடவுளாகிய “பேர் பெருந்தெய்வமனைத்திற்கும் பெருந் தேவன் தானெனவே” சிறக்க விளங்கும் முருகுடைய முருகனருளால் யான் உன்னுடைய துயரைக்களைவேன். நீ சிறிதுங் கவலையுறாதே. அம்மா! சாரதா! உன்னுடைய காதலராகிய சண்முக சுந்தரர் மறைந்த அன்றிரவும் உனக்கெழுதிய கடிதத்தின் கையொப்பத்தை மாத்திரம் யான் இப்பொழுது பார்க்க விரும்புகின்றேன்.”

“ஜயகுமாரரே! நான்சென்றுஅதனைக் கொண்டு வருகிறேன்.”

“அம்மா! செல்வதன் முன்னர் யான் வேறொரு விஷயத்தையும் அறிதல் வேண்டும். சாரதா! அவர் சென்ற ஓராண்டாக ஒரு கடிதமும் உனக்கு வரையவில்லையா?”

“இல்லை.”

“அவரைப் பற்றிய விஷய மொன்றும் நீ அறியவில்லையா?”

“ஜயகுமாரரே! மோகன சுந்தரப் பிரபுவினிட மிருந்து சில விஷயங்களை யுணர்ந்தேன். அவர் அவைகளை இரகசியமாக வைத்துக்கொள்ளுமாறு என்னிடங் கூறினார். அவைகளை யான் சுலோசனைக்கும் அறைந்தேனில்லை.”

“அம்மா! யானும் அதனை இரகசியமாகவே வைத்துக் கொள்ளுகிறேன். நீ அதனை மறைப்பதால் உனக்கொரு இலாபமுமில்லை. என்னிடமியம்பினால் அவைகளின் வாயிலாக நான் உம்முடைய காதலருக்கும் அவர் வாயிலாக உனக்கும் பெரும் உதவி செய்ய ஒல்லும்.”

“ஜயகுமாரரே! அண்ணா-நான்மோகனசுந்தரப் பிரபுவை அண்ணாவென்றே அழைப்பது வழக்கம் - அண்ணா ஒரு முறை சென்னையில் தம்புச் செட்டி வீதியில் ஓர் இல்லத்தில் அவரைக் கண்டாராம். அவர் தேகம் மெலிந்து வறுமையால்பெரிதும்வாடியிருந்ததாம். அவருக்குச் சிறிதுபொருளுதவிசெய்யுமாறு அவர் அண்ணாவைவேண்ட, அண்ணாவும் தன்னிடத்திலிருந்த பொருளையெல்லாம் அவருக் களித்தாராம்.”

“சாரதா! மோகன சுந்தரம் உன்னுடைய காதலரைஎப்பொழுது சந்தித்தாராம்.”

“தாம் விடுதலைக்குச் சென்னையிலிருந்து வருவதற்கு முந்தின நாளாம்.”

“அவருக்கு எப்படிஉன்னுடையகாதலரின் உறைவிடம் தெரிய வந்தது?”

“என்னுடைய காதலர் அவருக்குக் கடிதம் ஒன்று வரைந்திருந்தாராம்.”

“அதற்கு முன் சென்ற ஓராண்டாக மோகன சுந்தரர் சண்முக சுந்தரத்தின் இருப்பிடத்தை அறியாரோ!”

“அறியேனென்றே அவர் என்னிடங் கூறினார்.”

“சாரதா! உன்னிடம் ஏதாவது விஷயங்கூறுமாறு தம்முடைய சோதரரிடங் கூறினாரோ?.”

“ஆம். ஜயகுமாரரே! என்னை வீணாக வருந்தவேண்டா மெனவும், சில மாதங்களில் என்னைக் காண்பதாகவும் என்னிடங் கூறுமாறு கூறினாராம். மேலும் அண்ணா கூறியதிலிருந்து என்னுடைய காதலர் ஏதோ ஒருபெரிய இடுக்கணில் சிக்கி யிருப்பதாகவே தோன்றுகின்

றது. அண்ணா கூறிய மொழிகள் இப்பொழுதும் என்னுடைய நினைவில் மிளிர்கின்றன. "சாரதா! அண்ணா ஒரு மோசக்காரனிடம் மாட்டிக் கொண்டிருக்கிறார். காவியைத் தாங்கி உலகை ஏமாற்றித் திரியும் அப்பாதகனை-ஆ! சாரதா கொலை செய்திடினும் பாவமாகாது. நாளைக்குப் பத்தாயிரம் ரூபாயை யான் அச்சண்டாளனுக் களித்திடின், அண்ணாவை மீட்டு விடலாகும். இதுவும் இறைவனுடைய சித்தம் போலும். ஆ! முருக" என அவர்-ஜயகுமாரரே கண்ணீர் விட்டார்."

"அம்மா சாரதா! யான் ஊகித்தவாறு சில உண்மைகள் புலனாகின்றன. இறைவனைப் போற்றிநில். நின்னுடைய துயர் மறையுங் காலம் நெருங்கி விட்டது. அவனருளால் யான் அப் பாதகனைப் பிடித்து வாட்டுகின்றேன். நீ சென்று உன் கடிதத்தைச் சிறிது கொண்டு வருகிறாயா?"

"இதோ கொண்டு வருகிறேன்" எனக் கூறிச்சென்ற சாரதா சிலகிமிடங்களில் சுலோசனையுடன் திரும்பிக் கடிதத்தை ஜயகுமாரன் கையிற் கொடுத்தாள். ஜயகுமாரன் விளக்கி னொளியில் தன்னுடைய பூதக்கண்ணாடியின் உதவியால் அக்கடிதத்தின் கையொப்பத்தை ஒருமுறை நோக்கி விட்டு, கடிதத்தை சாரதாவினிட மீந்து "ஆம் மணியாகி விட்டது. நான் சென்று வருகிறேன். சுலோசனா! சாரதா! நீங்கள் இருவருங் கவலையுறாது இறைவனை இரந்து இருங்கள். உங்களுடைய துயரம் உங்களை விட்டகலும், சென்று வரட்டுமா?"

"ஜயகுமாரரே! சென்று வாருங்கள்; ஜயகுமாரரே! சென்று வாருங்கள். நீர் மீண்டும் எப்பொழுது வருகிறீர்கள்?"

"சுலோசனா! அநேகமாக நாளைக்கு இங்கு வருவேன்."

அதுகாலை வெளியில் மோட்டாரின் ஒலி யோசை கேட்டது.

"என்னுடைய பணியாளனாகிய சத்திய நாதன் எனக்காக வண்டியுடன் நெடுநேரம் காத்துக் கொண்டிருக்கிறான். நான் சென்றுவருகிறேன்" எனக் கூறி ஜயகுமாரன் வெளிப்போந்து தன் வண்டியுள் ஏறியமர்ந்து "சத்தியநாத! வேகமாகச் சென்னைக்குச் செல்" என்னலும் வண்டியும் அறுபது காதம் வேகத்தில் சென்றது.

திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்

[திரு. பொன்னம்மாள், பி. ஏ., எல். டி.]

I

"கோயில்" என்ற சொல்வழக்கும் கோயிற்பணியின் புராதன நோக்கமும்

தற்போதுள்ள தமிழ்நூல்கள்யாவற்றினும் புராதன முடைத்தாய்ப் பெரியோரால் கருதப்படும் நூல் தொல்காப்பியம் என்பது யாவருமறிந்ததே. அதன்கண் கடவுளரைப் பற்றியும், அவர் வழிபாட்டினைப் பற்றியும் ஆங்காங்கே கிளத்தப்பட் டிருப்பினும் கடவுளரின் உருவினைப் பற்றியோ அன்றி அவரிருக்கையைப் பற்றியோ எவ்விடத்தும் சான்றுகள் காணக் கிடையாவென அறிஞர் கூறுவர். 'கோயில்' என்பதற்கு அரசன் மனை என்பதே வழக்கா யிருந்திருக்கக் காண்கின்றனம். ஆயின், கடைச்சங்க நூல்களில் 'கோயில்' என்ற பதம் நாம் தற்காலம் வழங்கும் பொருளில் காணப்படா நின்றது. சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெகுண்ட மன்னவன் கோயிலும்"

என வருதல் காண்க.

'கோயில்' என்ற பொருளைக்கொண்ட 'கோட்டம்', 'நகரம்', 'இமயம்', 'பள்ளி' என்னும் சொற்களும் வழக்கிலிருந்தன என்பது சான்றோர் துணிபு.

கோயில் கட்டப்பட்ட காலம்

வேதகாலம், பிராமண காலம், உபநிடத காலம், மனுக்காலம் என ஆன்றோரால் பிரிக்கப்படும் நம் இந்து மதச் சரித்திரத்தின் இறுதிக் காலமாகிய மனுக் காலத்திலேதான், அதாவது ஏறக்குறைய கி. மு. 250-வது ஆண்டிற்றான் கோயிலைப் பற்றியும் கோயிற் குருக்களைப் பற்றியும் முதன் முதலாகத் தெளிவாய்க் குறிக்கப்படுகிறதைக் காண்கின்றனம் என ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர்.

கோயில் கட்டப்பட்டதன் நோக்கம்

மனுக் குலம் அனைத்திலும் யாது காரணம் பற்றியேனும் சமய வுணர்ச்சியும் கடவு ளுணர்ச்சியும் ஏதோ ஒருவாறு எக்காலமும் இருந்து வருகின்றன.

"அஞ்சி லாயினும் அன்புபட் டாயினும்
நெஞ்சம்! வாழி நினை கின்றியூரை"

என்ற ஆளுடைய பிள்ளையார் கூற்றின்படி 'ஆதிகால மக்கள் முதற்கண் அச்சத்தால் கடவுளை வழிபட்டோரே யாவர். பல சக்திகள் நன்மையையும் தின்மையையும் விளைவிக்கும் தன்மையனவென உணர்ந்து, அவை தம்மைத் துன்புறுத்தா வண்ணம், அவற்றின் தயைபெற நாடி வழிபட்டார். ஞாயிறு, திங்கள், வைகறை, வானம், தீ, மழை, இடி, காற்று, ஆறு, மலை முதலிய இயற்கைப் பகுதிகளே முன்னோர் வழிபட்ட தெய்வங்களாகும்.'

'இவற்றின் தயவைப் பெற உயிர்ப் பலி கொடுத்தனர். இப் பலிப் பொருளோடு சேர்த்தோ தனித்தோ தாமுண்ணும் மரக்கறி புணவுகளில் பலவற்றையும் படைப்பதுண்டு. வேள்வியில் தமது குறையிரந்து, விண்ணப்பத்தோடுதேவரைப்' புகழ்ந்தும் ஸ்தோத்தரித்தனர்.

மேற்கூறிய உயிர்ப் பலிக்கான மேடையே ஆதியில் மானிடர் கடவுளைச்சந்தித்து வழிபட்ட கோயிலாகும். இத்தகைய கடவு ளிருக்கை மலையின் மேலும், ஓரோர் இடத்தில் இயற்கை வளம் செறிந்ததோர் செழித்துத் தழைத்த மரத்து அடியிலும் அமைக்கப்பட்டது.

சிறிது அறிவு உதித்த காலையில் கடவுளரைப் பற்றித் தமக்குச் சிந்தையில் தோன்றியபடி கடவுளின் லட்சணங்களைப் பல சித்திரங்களாக வரைந்து வைத்ததோடு உருவாருபமாயும் படைத்துக் கோயிலில் வைத்தனர். இவை பலதிறப்பட்ட உருவங்களாயின.

கோயில் அமைப்பு முறை

யாதுகாரணமுமின்றி, இயல்பாகவே தம்மினின்றும் கடவுளுணர்ச்சி எழுந்ததன் காரணமாகத் தெய்வம் தம்முடலையே கோயிலாகக் கொண்டிருக்கிறார் என்றுணர்ந்த முன்னோர் அவரை முன்னிலைப்படுத்தி வழுத்தும் ஆர்வமுடையரானார். ஆகலின் அவரிருக்கையெனச் சமைத்த கோயில்கள் மானிட உடற்றத்துவங்களைக் குறிக்குமாறே சமைத்தனர்.

'அகவாலயத்தை முதலில் மானிடர்க்குணர்த்தி அவ்வழிபாட்டை உயிராற்றல் முடியாதென ஐயமுற்ற நம் பண்டை மக்கள் புறவாலயத்தை அகவாலயக் குறிகளாக்கினர். புறவாலய வழிபாட்டால் உள்ளத் துறுதியும் தூய்மையும், அரும் பொருளுணரும் ஆற்றலும் உண்டாகப் பெறுதற்காக மக்களுக்கு அவ்வாலயாதி வழிபாடுகளால் சரியையாதி முதலிரு நெறிகளை வற்புறுத்திப் பின்னர் அவ்வழிபாட்டினும் சிறந்தது அகவாலய வழிபாடெனப் பெரியோர் வழிகாட்டிச் சென்றனர்'. பல்லாண்டுகள் சென்றும் இப்பெரியாரது நன்னோக்கம் நிறைவேறப் பெறாது இன்னும் புறவாலய வழிபாடொன்றே சிறப்பாகச் செய்யப்படுகின்றது மிக இரங்கத்தக்கதே. நிற்க.

அகவாலயச் சிறப்பு யாது ?

ஆலயஞ் சென்று தொழல் அகவாலயத்திற்கு வழிநடத்தும் ஒரு படியாக மாத்திரம் கொண்டு பின்னதையே முடிவான சிறப்புடைத்தாய்க் கொண்டனர் நம் பெரியார் என்பதற்குப் போதிய சான்றுகளுள்ளன. அவற்றிற் சில கூறுதும் :

“ அகத்தினுட் பூசை செய்வார்க்
  கருவருப் பில்லை கொல்லும்
பகைத்தொழி லில்லை அல்லற்
  படுதலும் உடலுக் கில்லை
உகப்புறு பலமும் மேலாம்
  உறும்பல முனையி னற்பம்
சகத்தினுட் பூசை செய்வார்
  தமக்கெலாம் வருத்தஞ் சார்தும் ”

—சிவதருமோத்ரம்.

“ சிறந்தகத்துள் ஆன்மாவில் உறைசிவனைப்
  பூசையினைச் செய்யா ஞெகி
மறந்துபுறந் தனிற்பூசை வருந்தியே
  இயற்றுபவன் ஆவினின்றும்
கறந்தபா லடிசில்அகம் கையிலே
  யிருப்பதுந்தான் கண்டு ளுறு
புறங்கையினை நக்குபவன்
  போலுமால் ”

“ காயமே கோயி லாகக்
  கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
  மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலாய்
  நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
  போற்றவிக் காட்டினோமே”

—திருநாவுக்கரசர்.

“என் சிந்தை கோயிலாக வாழுங்குரு”

—தாயுமானவர்.

“அன்பர் மனமே கோயிலாக்கொண்டவன்”

—மணிவாசகர்.

“ மடங்கலிஞசனம் வார்த்தளிப்
  பிண்டிமும் மாமதில்சூழ்
கிடங்கலர் சோலைகள்
  நாடகசாலைகள் சேடில்விண்ணோர்
அடங்கலும் ஆடுகின்ற
  ஆடகக்கோயிலின் உம்மடியேன்
முடங்கல் மனலயமே
  இனிதாயிற்று எம்முத்தனுக்கே”

எவ்வாறு நம் தென்னிந்தியக் கோயில்களை ஒழுக்கத்துக்குரிய நற்களங்களாக்கலாம் ?

மேற்கூறிய அகவாலய வழிபாட்டினை முடிந்த பொருளாக் கொண்டு, புறவாலயந் தொழுதலை நம் மூதாதைகள் ஏற்படுத்திருக்கத் தற்காலம் நம் நாட்டு இளைஞராலும், நாகரிகம் பெற்றுள்ள மக்கள் பலராலும் கோயில் வழிபாடு எள்ளி நகையாடப்படும் நிலையை அடைந்திருக்கிறதை நாம்எங்கணுங் காண்கிறோம். காரணம் யாது? ஒரு தேயமோ பாஷையோ மனிதரோ உயர்ந்த நிலை வகித்திருந்து பின் க்ஷீணித்துப் போவதற்குப் பல அகக் காரணங்களும் புறக் காரணங்களும் உண்டு என்பதை நாம் சரித்திர வாயிலாகக் கண்டறிந்திருக்கிறோம். புறக் காரணம் யாதாயிருப்பினும், அகக் காரணங்களே அழிவுக்கு அடிப்படையாயிருக்கின்றன வென்பதை நாம் அனுபவத்திற் கண்டிருக்கலாம். மானிடருக் குண்டாகும் பலவிதப் பிணிகளுள்ளும், கண்ணுக்குப் புலப்படாது என்பு முதலிய மறைந்த ஸ்தானத்திலிருந்து முளைக்கும் புற்று(cancer), எலும்புருக்கி, க்ஷயரோகம் முதலியவைகளே மிக ஆபத்தானவை யென வைத்திய நிபுணர் கண்டறிந்திருக்கின்றனர். “மனிதனுக்கு வெளியேயிருந்து உள்ளே போகிற தொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தாது. உள்ளேயிருந்து வெளியே வருகிறதே மனிதனைத் தீட்டுப்படுத்தும்” என்று கிறிஸ்து பெருமான் கூறியதின் உண்மையும் அதுவாகும். தம்மிடத்தில் சிகிச்சை செய்து கொள்ள வரும் நோயாளிக்குப் பரிகாரஞ் செய்யுமுன் வைத்தியர் அவனை நன்கு சோதித்து அவனை யொடுக்கி வருத்தும் பிணி என்பைப்பற்றியதோ, நரம்பைப் பற்றியதோ, தசையைப்பற்றியதோ, நீரைப் பற்றியதோ என்பதைத் தெளிந்தபின்னரே பரிகாரஞ் செய்ய ஆரம்பிப்பார். நோயாளியைப் பலப்படுத்தும் எதுக்களையன்றி அந்நோயின் மூலகாரணத்தையே அறிக்க முதன்முதல் முயல்

வர் ; நோய் தெளிந்த பின்னரே பலத்துக்கான ஏதுக்களைக் கையாளுவர். அதுபோல் நம் நாட்டு ஆன்ம வளர்ச்சி குன்றிக் கோயில் பணி முதலியவை எண்ணமற்றுப் போவதற்கு நம்மிலே காரணமாயிருப்பதுயாதெனத் தேர்ந்து, அதனை நீக்கிய பின்னரே அவ்வளர்ச்சியைச் சிறப்பித்து உயரச் செய்யும் ஏதுக்களை நாம் கையாளுதல் நலம். அவைதான் யாதாயிருக்குமென எம் சிற்றறிவுக்குத் தோன்றியவாறு ஆராய்ந்து பார்க்க இறைவன் ஒளி தந்து உதவி புரிவானாக.

“பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” எனக் கூறிப்போந்த பெரியார் வாக்கு இவ்விடத்தில் சிந்திக்கற்பாலது. “பழையன வெல்லாம் நல்லன; புதியன வெல்லாம் தீயன என்பது ஆகாது” என்று கூறிப் போந்த பெரியாரது கூற்றும் நினைவு கூரற்பாலது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த நிலை எத்துறையிலும் இப்போதில்லை. தாது வர்க்க மண்டலம் துவக்கி, மனிதவர்க்கம் கடவுள் வர்க்கத்திலுங் கூடப் பெரும் மாறுதலுண்டாயிருப்பதை அறிஞர் யாவரும் ஒத்துக்கொள்வர். அக் காலத்தில் மனிதன் தனக்கான பல முன்னேற்றத்திற்கென வழக்கத்திற் கொண்டிருந்த பண்டங்களோ, தொழிலோ, போக்கு வரவுச் சாதனங்களோ இப்போது எத்துணையான அதிசய மாறுதல்களையடைந்திருக்கின்றன. அம் மாறுதலை விரிக்கிற் பெருகும். சுருங்கச் சொல்லின் எவ்வாறு மனிதர் தத்தம் அறிவு முதிர்ச்சிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்றவாறு காட்டு மனிதர், தற்கால மனிதர், உலோககால மனிதர், சாஸ்திரகால மனிதர், என அழைக்கப்பட்டனரோ, அதற் கேற்றவாறே அவருறையும் இல்லும், நடை உடை பாவனைகளும், பிறவும் அந்தந்தக் காலத்திற் கேற்றவாறு உயர்ந்து சிறந்த மாறுதலையடைந்து கொண்டே வந்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். குகைகளிலும், மரப் பொந்துகளிலும், சிறு குடிசைகளிலும் முறையே வசித்து வந்தோரின் வழித்தோன்றிய நாம் இப்போது வசிக்கும் பலதிறப்பட்ட மாட மாளிகை கூட கோபுரத்தின் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ! சிக்கிமுக்கிக் கற்களால் தனக்காகும் வெளிச்சத்தை யுண்டு பண்ணின மனுக்குலமானது தனதரிய சக்தியாலும், அதிசய புத்தியாலும் வானத்தின் பெருஞ் சுடர்களின் பேரொளியையும் மங்கச் செய்யும் படியான மகத்தான விளக்குகளைக் கண்டறிந்து பிரயோகிக்கின்றது.

இதுமாத்திரமன்று. அக்குலம் நிலன், தீ, நீர், வளி, விசும்பு ஆகியன பஞ்சபூதங்களின் தகைமையையும் சாஸ்திர வாயிலாகக் கண்டறிந்து, அவற்றை அடக்கியாளும் ஆற்றலும், அறிவு மடைந்து, தனக்கான பல சௌகரியத்திற்கென அவற்றைப் பயன்படுத்திக் கொண்டும் வருகின்றது. “அரிதரிது மானிடராதல் அரிது” என்று கூறிப்போந்த நம் முன்னோர் இத்தகைய அதிசயசக்தியின் பயனை இப்போது காண்பாராயின், எத்தனையாக இறைவனை வழுத்தி ஸ்தோத்தரிப்பர்! இவ்வாறு லௌகிகத்துறையில் உயர்ந்து, நடந்து, ஓடிப் பறக்கும் சக்தியையும் மனிதன் அடைந்து விட்டான்; அன்றியும் ஒப்புயர் வில்லாத் தன் புலமையை, உலகெங்கணும் பரவும் நிலன் நூல், வான் நூல், மொழி நூல், மன நூல், உயிர்களின் தோற்ற வளர்ச்சி நூல், மக்கட் டோற்ற நூல் ஆகிய பல்வகை அரிய நூல்களையும் எழுதிக் காலாகாலத்தில் திருத்திப் பெருக்கிப் பயன்படுத்தி வருகின்றான்.

இத்தகைய நவீன நாகரிகத்தையும் நலத்தையு மளிக்கும் நல்லறிவின் முதிர்ச்சியின் மத்தியில் நம் தற்காலக் குழந்தைகள் பிறக்கின்றன. காலத்துக் கேற்றவாறே அக்குழந்தைகளின் அறிவும் ஆற்றலும், ஆராய்ச்சி யுணர்வும், தாம் காணும் எத்தகைய செயலுக்கும் காரண காரியத்தை யுன்னி நோக்கிக் கண்டுகளிக்கும் பெரும் விருப்பும் மிக இளமைப் பிராயத்திலேயே காணப்படுகின்றன. அன்னோரது மன

நிலையையும், அறிவு நிலையையும் நன்குணர்ந்து அவற்றிற்குத் தக்கதாக ஒவ்வொரு துறையிலுமுள்ள மெய்ப்பொருளைப் படிப்படியாக அறிவுறுத்தி உன்னத நிலைக்குக் கொணர்தலே தற்காலக்கல்வி இலாக்காவில் புக்குழைப்போரின் சிரிய நோக்கமாகும். பிறதுறையிலிருந்து தம் தேசீயப் பொதுநலத்திற்கெனத் தொண்டு புரியும் பெரியாரின் நோக்கமும் அதுவே யாகும்.

இக் கோட்பாட்டுக்கு முற்றிலும் மாறாக நம் கோயில்களும், அவற்றிற் பள்ளிகொள்ளும் கடவுளரும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் நிறுத்தப்பட்டபடியே அசைவும், ஆற்றலும் அற்றுத் தோன்றுவனபோல் காணப்படுகின்றன. கோயில் கட்டப்பட்ட முறைகளும், கோயில் வழிபாடு, திருப்பணி முட்டுகள், ஆசாரியர் முறைமை முதலியவைகளும் அவை யுண்டாய காலத்தில் பல அரிய கொள்கைகளையோ, சத்தியத்தையோ உணர்த்துவனவா யிருந்தன. கோயில்களில் உள்ளும் புறம்பும் நிறுத்தப்பட் டிருக்கும் பல பாவைகளும், உருவங்களும், அவற்றில் சித்திரிக்கப்பெற்ற பல புராணக் கதைகளுங்கூட கடவுள், ஜீவர்கள் முதலியோரைப் பற்றிய உண்மைகளையும், இம்மை, மறுமை என்பவற்றைப் பற்றிய சத்தியங்களையும் காட்டி நின்றன. அவ்வாறு அவற்றில் பொதிந்து வைக்கப்பட்ட கொள்கைகளும், உலக சத்தியங்களும் காலஞ் செல்லச் செல்ல வெளிப்பட்டு அநேகருக்குப் பயனளித்தன.

இவ்வா றளிக்கப் பெற்ற பெரும் பயனை அடிப்படையாகக் கொண்டு, அதன்மேல் காலத்துக் கேற்றவாறு அப்பயனைப் பெருக்கி, இறைவனைப் பற்றியும் உயிர்களைப் பற்றியும் இன்னும் உயரிய அறிவையும், உண்மைகளையும் கண்டு அவற்றைப் பின் சந்ததிக்கான அஸ்திபாரமாகப் பொதித்து வைப்பதே சான்றோர்க் கழகும் அவரது முக்கிய கடமையுமாகும்.

“உவமைகளால் என் வாயைத் திறப்பேன்” என்று கூறிய கிறிஸ்து பெருமானைப் போல் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள நமது ஞானிகள் பல அரிய சத்தியங்களை அக்கால மக்கள் எளிதில் அறியுமாறு பல திறப்பட்ட கதைகளைக்கொண்டு விளக்கினரேயொழிய அக்கதைகளிலுள்ள சம்பவங்கள் உண்மையாக நிகழ்ந்தன என்று தம் பின் சந்ததியார் கொள்ள வேண்டுமென்ற கருத்திற் கூறினாரிலர். இரண்டொரு உதாரணம் பார்ப்போம்:

முழு முதற் பொருளாக் கொண்ட சிவபெருமானை ‘மாதுடைப் பாகன்’ ‘திரிபுரமெரித்தோன்’ ‘நீலகண்டன்’ எனப் பெயர் கொடுத்து அவற்றின் கருத்துக்களைக், கதைகளைக் கொண்டு உணர்த்தினரன்றோ? தற்காலம் ஆராய்ச்சிவல்லார் சிலர் கூறுவது போல் ‘மாதுடை பாகன்’ என்றது இறைவனுக்குள்ளே அம்மை - அப்பரின் குண விசேடத்தையே காட்டி நின்றது. இறைவனது இருமுக்கிய லட்சணங்கள், இருமையும் சத்தியமும், அன்பும் நீதியும், தண்மையும் வெம்மையும், அருளும் ஆண்மையுமாகும். இவ்வாறு பொருள் கொள்ளுவதற்குப் பதில் அவ்வுருவினைப் போலவே கடவுள் ஆணுருப்பொரு புறமாகவும் பெண் தன்மை மற்றொரு புறமாகவும் இரு கூறுகளைத் தன் சரீரத்தில் உண்மையாகக் கொண்டிருப்பதாகவே தீர்த்துச் சிவனைப் பெரும்பான்மையினர்வழுத்துகின்றனர். என்னை? நமக்கெதிரே அவ்வித இயற்கைக்கு மாறாக ஓர் உருவம் இதுவெனத் தோன்றுமாயின் நம்மில் பலர் அவ்வுருவினைச் சிவனென வழிபடுவரோ? அன்றித் திறந்த வாயுடனும், இமையாத கண்ணுடனும், மேலும் கீழும் முறையே உற்று நோக்கி, நகையாடுவரோ? அதைச் சிந்திப்பார் உணர்வாராக.

அவ்வாறே ‘திரிபுர மெரித்தோன்’ என்றது மானிட இயற்கையில் காணப்படும் ஆணவம், வெகுளி, மயக்கமாகிய முக்குறும்புகளையும் அழித்து நாசப்படு

த்தி, ஜீவர்களை ஆன்மவெற்றிகொள்ளச் சகாயம் செய்யும் சர்வ வல்லவரின் பேராற்றலையே தெரிவித்து நின்றதே யொழிய, பலர் கருதுமாறு அக் கதையிற் கூறப்பட்ட சம்பவங்கள் உண்மையாகவே நடைபெறவில்லை யென்பதை ஆன்றோர் சிலர் அறிந்துகூறுவர். "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"—மத்தேயு 1 : 21. என்று கிறிஸ்தவரின் சத்தியவேதப் புத்தகத்தில் குறிப்பிட்ட பொருளையும் இங்கே ஒப்பிட்டுப் பார்க்க.

அப்படியே 'நீலகண்டன்' எனச் சிவனைக் குறிப்பிட்ட கதையின் பொருளும் ஓர் அரிய சத்தியத்தையே முன் குறித்து நின்றதென்பதை அதைச் சிந்திக்கும் உண்மை யறிவும் உயரிய வாய்மையு முடையார் காணுதிரார். அஞ்ஞானத்திலும், மாயையின் சிக்கிலும், பால இருளிலும் அழுந்தியுழலும் தாம் மக்களை அச் சேற்றினின்றும் தூக்கி எடுத்து, கழுவி, பரிசுத்தராகிய தம்மோடு முடிவில் ஒப்புரவாக்கச் சித்தங் கொண்ட நம் தந்தையாகிய இறைவன் தம் திருச்சித்தத்தை நிறைவேற்றுமாறு எடுத்துக்கொண்ட எதுவையே அக்கதையின் பொருள் உணர்த்தா நின்றதென்பது எமது கருத்து. அவ்வேதுதான் என்ன? பாற்கடல்கடைந்த கதையிற் கூறியபடி தீயோனுல் உலகிற்கு நேரும்தீங்கனைத்தையும் நிவர்த்தி செய்து சிறந்த தந்தையையும் தாயையையும் போன்று தம் உயிரைக்கொடுத்தேனும் மானிடரை இரட்சிப்பின் வழி சேர்க்கச் சித்தங் கொண்டதே.

"மெய்யாகவே அவர் நம்முடைய பாபங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.......நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"—ஏசாயா 53 : 4-5. "பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்"—1 கொரிந்தியர் 15 : 26. "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்"—எபிரேயர் 2 : 14-16. என்று கிறிஸ்தவரின் வேத வாக்கியங்களில் கூறப்பட்டிருப்பதின் கருத்தும் இங்கே சிந்திக்கற்பாலது.

இடியேறு

திருஞான சம்பந்தர்

தமிழறிஞர் - சே. சிவஞானம் பிள்ளையவர்கள் இயற்றிய "திருஞான சம்பந்தர்" என்னும் நூல் நமது பார்வைக்கு வந்தது. இந்நூல் மூன்று பகுதிகளால் ஆக்கப்பட் டிருக்கிறது. ஒன்று சரித்திரம்; மற்றொன்று 'குறிப்புகள்' என்பது; இன்னொன்று 'ஆராய்ச்சிக் குறிப்புகள்' என்பது.

சரித்திரம் மூலத்தைத் தழுவி எளிய இனிய நடையில் எழுதப்பட் டிருக்கிறது. பொருந்திய இடங்களில் மூலத்தின் சொற்களையும் சொற்றொடர்களையும் ஆசிரியர் ஆண்டு செல்லுதல் அழகுக்கு அழகு செய்வதா யிருக்கிறது. தமிழ் உரைநடை பயில்வோருக்குப் பிள்ளை யவர்களின் உரைநடை வழிகாட்டியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

குறிப்புக்களில் அரும்பதவுரை, குறிப்பீட்டு விளக்கம், திருப்பதிகளுள்ள இடங்களைப் பற்றிய குறிப்புகள் முதலியன பொறிக்கப்பட் டிருக்கின்றன. இவை, மாணுக்கர்கட்கும், யாத்திரை

வாசிகட்கும், மற்றவர்கட்கும் பெருந் துணை செய்யும் முறையில் ஒழுங்கு செய்யப்பட் டிருக்கின்றன.

ஆராய்ச்சிக் குறிப்புகளை நோக்க நோக்க மகிழ்ச்சி பெருகுகிறது. அக் குறிப்புகள் தமிழுலகிற்கும், சைவ உலகிற்கும், ஆராய்ச்சி உலகிற்கும் பெரு விருந்து செய்வன என்று கூறல் மிகையாகாது. ஆராய்ச்சிக் குறிப்புகள், தமிழறிஞர் சிவஞானம் பிள்ளை யவர்களின் தேவார ஆராய்ச்சியின் பெருக்கையும் திறத்தையும் ஆழத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. பிள்ளை யவர்கள் தேவாரக்கடலைப் பன்முறை கடைந்து கடைந்து தேவார இன்னமிழ்தையும், அக்கடலில் பன்முறை படிந்து படிந்து தேவார நுண்பொருள் மணிகளையுங் கொணர்ந்து தமிழுலகத்துக்கு உதவி யுள்ளார்கள். திருஞான சம்பந்தர் வரலாற்றுக்கு அரண் செய்ய வல்ல அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் நூலிடை மலிந்து கிடக்கின்றன.

திருஞான சம்பந்தர் வரலாறு பல ரால் வரையப்பட்டிருக்கிறது. சிலர் வரலாற்றை மட்டும் எழுதியுள்ளார்; சிலர் வரலாற்றோடு மிகச் சில குறிப்புக்களைப் பொறிக்கும் அளவில் நின்றுவிட்டார்; சிலர் மிகச் சில அகச்சான்றளவில நின்றுள்ளார். இந்நூலாசிரியர் தேவாரத் துறைகள் பலவற்றில் நுழைந்து உழைத்துத் "திருஞான சம்பந்தரை" உருப்படுத்தியிருக்கிறார். இவர் தம் ஆராய்ச்சி, காய்தல் உவத்தல் அற்ற நடு நிலையினின்றும் பிறந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. திருஞான சம்பந்தரைப்பற்றிய ஆராய்ச்சி நூல் இதுகாறும் இம்முறையில் வெளி வரவில்லை என்று கூறலாம். இவ்வாராய்ச்சி முறையில் இந்நூலாசிரியரால் அப்பர் வரலாறும், சுந்தரர் வரலாறும் எழுதப்பட்டிருக்கின்றன; மாணிக்கவாசகர் வரலாறும் எழுதப்பட்டு வருகிறது என்று அறிகிறோம். திருவாளர் சிவஞானம் பிள்ளை யவர்கள் எழுதியுள்ள இந்நூல்கள் தேவார நுண்பொருள்கள் பலவற்றை மக்கள் முயற்சியின்றிப் பெறுமாறு ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கின்றன என்று சுருங்கச் சொல்லலாம். ஆராய்ச்சி யுலகுக்குப் பயன்படும் வழியில் நூல்களை யாத்து உதவிவரும் ஆசிரியர் சிவஞானம் பிள்ளையவர்கட்கு நமது நன்றி உரியதாக. விலை ரூ. 1-4-0. விலாசம்: ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை.

ஸ்ரீ ரமண விஜயம்

இப்பெயர் வாய்ந்த நூல் வரப்பெற்றோம். இந்நூல் ஸ்ரீ ரமண ரிஷியின் வரலாற்றைக் கூறுவது. கதா நாயகர் இந்நாளில் திருவண்ணாமலையில் எழுந்தருளி யிருப்பவராதலான், அவரைப் பற்றி விரித்துக் கூறவேண்டுவதில்லை. அருணாசலம் நோக்குவோர் பலர் இப் பெரியாரைக் காணாது செல்வது அரிது என்பதை நாம் நன்கு அறிவோம். இவர்தம் வரலாற்றை நண்பர் சுத்தானந்த பாரதியார் எழுத நேர்ந்ததை குறித்து மகிழ்வெய்துகிறோம். ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தமிழ்த் தாயின் இனிய சேய்களுள் ஒருவர். உள்ளத்தெழுங் கிளர்ச்சியை உள்ளவாறே வெளியிட்டு எழுதும் ஆற்றல் ஸ்ரீ சுத்தானந்த பாரதியாருக்குண்டு என்பது அவர் தம் நூல்களால் நனிவிளங்கும். ஸ்ரீ ரமண விஜயத்தில் உண்மை ரமணர் விளங்குமாறு அறிஞர் பாரதியார் வரைந்துள்ளார். ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பெற்றுள்ள ஆன்றோர் மொழிகள் நெஞ்சைக் கவர்கின்றன. நூல் நன்னடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-4-0. விலாசம்: காரியதரிசி, ஸ்ரீ ரமணாச்ரமம்; திருவண்ணாமலை.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராணமெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் நினைப்பிக்கும் போாற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் 'ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை		ரூபா 5.
,, ,, ,,	வெளியூர்—தபாற் செலவுடன்	,, 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
ந. சண்முகக் கவிராயரின்

மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷேடி சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,
வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

இதோ! தாது புஷ்டி

மதனமஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

விபரம் வேண்டுவோர் இனமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—

M. S. ம K. B. அண்டு கோ.,
No. 14, டத்தோகிரமாட் ரோட்,
பினங்கு.

T D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொளும்பு.

ஆனந்த மெடிகல் ஹால்.
No165, செட்டித்தெரு, கொளும்பு.

வரப்பிரசாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, நபும்ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம்! கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி S. I.

ஆனந்தாதி ஆனந்த அட்சயாந்த

73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

" நவசக்தி " ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண்ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா ?

வேண்டுமானால்

" நவசக்தி " ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4
சமரச சன்மார்க்க போதம்	0	8

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை,

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

		ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (பெரியவனது)	...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்)	...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம்	...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி	...	1	6
குருதேவர் வாக்கியம் ...	...	0	5
நமது தாய்நாடு ...	...	0	8
பக்தியோகம் ...	...	0	10
கர்மயோகம் ...	...	0	12
சிகாகோ பிரசங்கம் ...	...	0	5
விவேகானந்தரின் கடிதங்கள்	...	0	8
எனது போர் முறை ...	...	0	2
பவாஹாரி பாபா ...	...	0	3
ஜகஜ்ஜீவபர விளக்க வினவிடை	...	0	13
பக்தி மார்க்கம் ...	...	0	2
முக்திநெறி ...	...	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்		0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

சத்தியம் விளங்கவேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே

அணைகோலிக் கொள்வது நல்லது

உங்கள் எதிர்கால நிலைமையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்க்கை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிமித்தம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருபாவம் முற்றிலுஞ் சொல்ல ரூபா 10; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2; நுணுதி சயங்களை உரைக்க ரூபா 2.

C. J. கிருஷ்ணசாமி,
38, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
டெடி. ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திரு அருட்பா - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
நூதன விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணா 5.

(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - தும்ப கோஷம்)

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500 "NAVASAKTI"

ஜெகப் பிரசித்திபெற்ற

காமினியா சோப்புகள்

காமினியா வைட் ரோஸ் சோப்

உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் விசேஷமான வாசனையால் மக்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா சந்தன சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், மனதிற்கு விருப்பமான மதுவான வாசனையையும் கொடுக்கிறது. இது முரடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா லவெண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மிக்க ரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரசாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய ரசாயன முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மஹோன்னதமான சோப். இதன் அதியற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனை தங்கள் அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் ஏஜெண்டுகள் :—

ஜே. என். சேட் & கோ,

நெ. 68, பைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 42, Ganapathi Mudali Street, Royapettah, Madras.